

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 22 இதழ் - 7 ஜூலை 2009

## கிறிஸ்துவின் சபை

காங்கயம் 638 701. தமிழ்நாடு. இந்தியா.
04257 - 230030, 230603, 98427 - 30382, 99655 - 30385
E-Mail : Kangayamcofc@eth.net.

ஜெபியுங்கள் ! பங்கு பெறுங்கள் !!

# 12 - ம் வேதாகம கருத்தரங்கம்

நாள் : அக்டோபர் 2, 3 - 2009
(அரசு விடுமுறை நாட்கள்)

நேரம் : காலை 9.00 மணி

இடம் : கிறிஸ்துவின் சபை வளாகம்
தாராபுரம் ரோடு, காங்கயம். திருப்பூர் மாவட்டம்.

திருமறை ஆசான் வாசகர்களும், திருமறை தியானம் தொலைக்காட்சி நேயர்களும் பெருந்திரளாகக் கலந்து கொள்ள ஜெபத்தோடு அழைக்கிறோம்.

தொடர்புக்கு :
**98427 30382, 99655 30385, 30386**

## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. தேவையிலிருப்போருக்கு உதவுவது ........ 10
3. பெண்கள் பகுதி ........ 14
4. வாலிபர் பகுதி ........ 18
5. சிறுவர் பகுதி ........ 22
6. பெரோயரும், தெசலோனிக்கேயரும் ........ 24
7. நீங்கள் விசுவாசமுள்ளவர்களோ? ........ 27
8. இரத்த சாட்சிகள் ........ 29

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
**Editor**
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 22** **JULY - 2009** **Issue - 7**

ஆசிரியர் உரை

## ...தார்...றார்...பார்

தான் நேசிக்கின்ற ஒரு மனிதன் பற்றியோ அல்லது தான் மதிக்கின்ற ஒரு நண்பர் பற்றியோ அல்லது தான் ஏற்றுக் கொண்டிருக்கின்ற ஒரு தலைவர் பற்றியோ தனது கருத்தை அல்லது மதிப்பீட்டை வெளிப்படுத்த நேரும்போது, அதற்காக மிகத் தேர்ந்த வார்த்தைகளைப் பொறுக்கியெடுப்பதென்பது இந்நாட்களில் வாழும் நமக்குப் புரியாத ஒன்றல்ல. இக்காலத்து மனித மனங்களின் தன்மையையும், நம்மைச் சுற்றியிருக்கின்ற சமுதாயத்தையும், நம் காலத்து அரசியலையும் நாம் அப்படியே கவனித்தால், அடியேனின் இக்கூற்று உண்மைதான் என்பதை ஒருவாறு ஒத்துக்கொள்ள முடியும். இப்படிப் பயன்படுத்தப்படும் வார்த்தைகளில் அர்த்தம் இருக்கிறதோ இல்லையோ, அலங்காரத்திற்கு குறைவேதுமிருக்காது. அநேக சமயங்களில், சொல்லப்படும் நபருக்கும், பயன்படுத்தப்படும் வார்த்தைகளுக்கும் எந்த சம்பந்தமுமில்லையென்பது பட்டவர்த்தனமாகத் தெரியும்.

இப்படி மரியாதை என்ற பெயரில், தனக்குப் பிடித்தவர்களுக்குக் கொஞ்சமும் பொருத்தமற்ற வார்த்தைகளைப் பயன்படுத்திப் பழக்கப்பட்ட மனிதன், ஆன்மீகத்திற்கு வரும் பொழுதும் இப்பழக்கத்திற்கு விடை கொடுக்க விரும்புவதில்லை. ஜென்மீகமும், ஆன்மீகமும் முற்றிலும் வேறுபாடு கொண்டவை என்பதை மானிடம் எந்தவொரு காலகட்டத்திலும் ஒழுங்காக உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. ஆன்ம காரியங்களை ஆழமான பொருளில் அறிந்து கொள்வதற்கு முயற்சியும், பயிற்சியும், ஆராய்ச்சியும் தேவை என்பதையும் ஏற்றுக்கொள்வதில்லை. மாறாக, தான் குறிப்பிட்ட நம்பிக்கை கொண்ட ஒரு குடும்பத்தில் பிறந்துவிட்ட ஒரே காரணத்திற்காக, அது உண்மைதானா என்பது பற்றிக் கிஞ்சித்தும் கவலைப்படாமல், அதைப்பற்றி வாய்

நிறையப் பேசவேண்டு மென்று விரும்புகிறார்கள். அதற்காக தனக்குத் தெரிந்த உயரிய வார்த்தைகளைப் பயன்படுத்தத் தயங்குவதேயில்லை. மத நம்பிக்கை என்ற பெயரில் பாடப்படும் பக்தி பாடல்களையும், சொற்பொழிவு என்ற பெயரில் நிகழ்த்தப்படும் பக்தியுரைகளையும் நாம் கவனித்தால், இக்கருத்தும் உண்மை தான் என்பதை இதயமுள்ளவர்கள் ஏற்றுக்கொள்வர். இப்படிப்பட்டவர்கள், தங்கள் மத நம்பிக்கையை வெளிப்படுத்தி, அதை நிலைநிறுத்துவதற்கு அறிவுப்பூர்வமான ஆதாரங்களையோ அல்லது உண்மை தான் என்று ஏற்றுக் கொள்ளக்கூடிய அனுபவத்தையோ சான்றாகக் கொள்ளாமல் பெரும்பாலும் ஒப்பிடுதலையும், கற்பனைகளையும் மூலதனமாகக் கொண்டிருப்பர்.

ஆனால், பரலோகத்தின் தேவனால் நமக்கு கொடையாகக் கொடுக்கப்பட்ட பரிசுத்த வேதாகமத்திற்கு வரும்போது, அங்கே ஒப்பிடுதலுக்கும், கற்பனைகளுக்கும் சுத்தமாக வேலையில்லையென்பது அப்பட்டமாகத் தெரியும். பரிசுத்த ஆவியானவர் ஏவினபடி பரிசுத்த மனிதர்கள் தேவனுடைய சத்திய வார்த்தைகளை எந்தக் கலப்புமில்லாமல், பரலோக மணம் மாறாமல் அப்படியே வடித்துக்கொடுத்துள்ளனர். (2 தீமோ.3:16,17; II பேதுரு 1;21). சர்வ வல்லவரின் மகத்துவங்களையும், மகிமைகளையும் தங்கள் வாழ்வில் கண்டும், ருசித்தும் அவருடைய அற்புத வழிநடத்துதல்களை அனுபவித்தும் எழுதிக் கொடுத்துள்ளனர். கிறிஸ்தவம் உலகெங்கிலுமுள்ள ஏராளமானவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதற்கும், தன்னிகரில்லாத மார்க்கமாக என்றென்றும் திகழ்ந்து கொண்டிருப்பதற்குமான அடிப்படை இதுதான். அப்பரிசுத்தர்கள் கண்ட அந்த அலாதியான ருசியையும், ஆற்றாமையை ஏற்படுத்தும் அவர்களின் அனுபவத்தையும் நாம் வேதாகமத்தின் பக்கங்களில் பார்த்துப் பார்த்து மகிழலாம்.

ஆம், முற்பிதாக்களின் காலத்தைச் சேர்ந்தவனென்று நம்பப்படுகின்ற பக்தன் யோபுவின் நண்பர்களில் ஒருவனாகிய எலிப்பாஸ் பரலோகத்தின் தேவன் பற்றி “அவர் காயப்படுத்திக் காயங்கட்டுகிறவர்” (யோபு 5:18) என்று சொல்லுகிறானே அது என்ன கற்பனையானதா? அல்லது மோசேயின் காலத்தைச் சேர்ந்த மாமன்னன் தாவீது, “நான் இளைஞனாயிருந்தேன், முதிர் வயதுள்ளவனுமானேன், தேவனுடைய பிள்ளைகள் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்திற்கு இரந்து திரிகிறதையும் நான் கண்டதில்லை (சங்.37;25) என்று எழுதியுள்ளாரே, அது தான் கற்பனையாக இருக்க முடியுமா? சொல்லுங்கள். உன்னதரோடு அவர்களுக்கிருந்த இனிய உறவின் வெளிப்பாடுகளல்லவா அவைகள்! அச்சில் வார்த்து எடுத்தது போன்ற அதே ரகத்தைச் சேர்ந்ததுதான் இம்மாத தலைப்புக்காக பவுலடியார் நமக்கு எழுதிக் கொடுத்துள்ள வார்த்தைகளும். ஆம், தன் நம்பிக்கையாயிருக்கிற தேவனைப் பற்றி ஏதோ சொல்லவேண்டுமென்பதற்காகவோ, அப்படிச் சொல்வது சிறப்பாக இருக்க வேண்டுமென்பதற்காகவோ எழுதப்பட்டதல்ல அவை. முழுமையாக அனுப

வித்து, முற்றும் உணர்ந்த நிலையில் செதுக்கப்பட்ட வார்த்தைகள் அவை. இதோ கவனியுங்கள். "நாங்கள் எங்கள் மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன் மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம். அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார். இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்" (2 கொரி 1;9,10).

சரி, தப்புவித்தார், தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்ற வார்த்தைகள் அவரின் அனுபவ வார்த்தைகளெனில், அதை எங்கே அனுபவித்தார், எப்படி அனுபவித்தார் என்ற நியாயமான கேள்வி வருகிறது. அப்படித்தானே! அதையும் பார்த்து விடலாம் வாருங்கள்.

அப்போஸ்தலன் பவுல் கொரிந்து பட்டணத்தாருக்கு இரண்டு நிருபங்களை எழுதினார் என்பது நம் அனைவருக்குமே தெரியும். சொல்லப்போனால், அவர் மூன்று நிருபங்களை எழுதியிருக்கவும் வாய்ப்புண்டு. நான் இப்படிச் சொல்வதற்கு 1 கொரி 5:9-ஐ நீங்கள் ஆதாரமாக எடுத்துக் கொள்ளலாம். ஆனால், அவைகளில் இரண்டு எழுத்து வடிவில் நம்மிடம் உள்ளது. தப்புவித்தார், தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று சொல்லத்தக்க அளவில் அவருக்கு கிடைத்த இனிப்பும், கசப்பும் கலந்த அவ்வனுபவம், நமக்குக் கிடைத்துள்ள இரண்டு நிருபங்களுக்கிடையில் நடந்துள்ளது. இன்னும் இந்நாட்கள் அவருடைய மூன்றாவது நற்செய்தி பயணத்தின் காலத்துக்குப் பொருந்தி வருகிறது. மேலும், இச்சம்பவம் எபேசு பட்டணத்தில் நிகழ்ந்துள்ளது. கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபத்தின் இறுதியில், இப்பட்டணத்திற்குப் போகவேண்டுமென்ற தேவ ஏவுதலின்படியான திட்டத்தை வெளிப்படுத்துகிறார். ஆகிலும் பெந்தெகொஸ்தே பண்டிகை வரைக்கும் எபேசு பட்டடணத்தில் இருப்பேன். ஏனெனில், இங்கே பெரிதும் அனுகூலமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது; விரோதஞ் செய்கிறவர்களும் அநேகர் இருக்கிறார்கள் என்று. (1.கொரி 16;8,9).

பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதல்படியும், தன்னுடைய திட்டத்தின்படியும், அப்பொல்லோ என்பவன் கொரிந்து பட்டணத்தில் இருக்கையில், பவுல் மேடான தேசங்கள் வழியாய்ப் புறப்பட்டு எபேசு பட்டணத்திற்கு வந்து சேர்ந்தான் (அப். 19;1) அங்கே தன்னுடைய பழக்கத்தின்படி, பக்தியுள்ள யூதர்கள் கூடும் இடமாகிய ஜெப ஆலயத்தில் பிரவேசித்து, மூன்று மாதமளவும், சபையாகிய தேவனுடைய ராஜ்யத்துக்கடுத்தவைகளைக் குறித்து சம்பாஷணைபண்ணி புத்தி சொல்லிக் கொண்டு வந்தான் (அப். 19;8) அப்பொழுது, பக்தி வேடம் பூண்டு ஜெப ஆலயத்திற்கு வந்து போய்க்கொண்டிருந்த சில போலி விசுவாசிகளால், தன் ஊழியத்துக்கு ஊறு நேர்ந்தபோது, நம்மில் அநேகரைப் போல் நைசாக நழுவ முயற்சிக்காமல், அசல் விசுவாசிகளின் ஆத்துமாக்கள் மீது பாரம் கொண்டு, திறன்னு என்னும் பேர் கொண்ட ஒருவனுடைய பாடசாலையில் அனுமதி வாங்கி, அவர்களின் ஆன்ம மேம்பாட்டுக்காக அனுதினமும் உரையாடி வந்தான் (அப் 19;9).

அவருக்காக உண்மையாகப் பாடுபடும் தேவ மனிதர்களை ஒருபோதும் கைவிடாத பரலோக தேவன், பவுலின் கைகளினாலே அநேக விசேஷித்த அற்புதங்களைச் செய்தார். (19;18). பவுலின் சரீரத்திலிருந்து உறுமால்களையும், கச்சைகளையும் கொண்டு வந்து வியாதிக்காரர் மேல் போட வியாதிகள் அவர்களை விட்டு நீங்கிப் போயின. அத்தோடு, பொல்லாத ஆவிகளும் சொல்லாமல் கொள்ளாமல் பறந்தன (19;12) அங்கே, பவுலின் வல்லமையைக் காப்பியடிக்க முயற்சித்த பிரதான ஆசாரியனாகிய ஸ்கேவாவின் ஏழு குமாரர்களும் அரை குறை ஆடையோடு ஓட்டம் பிடிக்கும்படி தேவன் செய்தார். இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது. மாயவித்தைக்காரர்களாயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புத்தகங்களைக் கொண்டு வந்து எல்லோருக்கு முன்பாகச் சுட்டெரித்தார்கள். தேவனுடைய வசனம் அப்பட்டணத்தில் இப்படிப் பலமாய் விருத்தியடைந்து மேற்கொண்டது (19:16,20). அங்கே நடந்த காரியங்களை அப்படியே எண்ணிப்பாருங்கள். அதிரடியான அற்புதக் காட்சிகள், பொல்லாத ஆவிகளின் அடக்கமான புறப்பாடு. ஏமாற்றுக்காரர்களின் நிர்வாண ஓட்டம். மாய வித்தைக்காரரின் புத்தகக் குவியல் எரிப்பு. இதன் மூலம் ஆத்தும அறுவடையையும் கர்த்தருடைய வார்த்தைகளின் விருத்தியையும் கண்டு ஆனந்தப்பட்ட பவுலடியார், தனக்கு உதவி செய்தவர்களில் இரண்டு பேராகிய தீமோத்தேயுவையும், எரஸ்துவையும் மக்கெதோனியாவிற்கு அனுப்பி விட்டு, தான் பின்னும் சில காலம் ஆசியாவிலேயே தங்கினான் (19;23).

இப்பொழுதுதான், நம்முடைய ...தார்...றார்...பார் என்று சொல்லுவதற்கு ஏதுவான காரணங்களுள் ஒன்று ஆரம்பமாகிறது. ஆம், பவுலடியார் சீக்கிரம் வெளியேறி விடுவான் என்று காத்திருந்த ஒரு தேவ விரோதக் கும்பல். அவன் இன்னும் சில காலம் அங்கேயே தங்கிவிட முடிவெடுத்ததைக் குறித்து கலக்கமடைந்து, சூழ்நிலையை எதிர்கொண்டு முறியடிக்க சதித்திட்டம் தீட்டியது. அதற்குத் தலைமையேற்றவன் விக்கிரக வியாபாரியாகிய தெமேத்திரியு. பல மார்பகங்களைக் கொண்ட ஆபாச தேவதையாகிய தியானாளின் கோவிலைப் போல வெள்ளியினால் சிறிய கோயில்களைச் செய்து தொழிலாளிகளுக்கு மிகுந்த ஆதாயத்தை வருவித்துக் கொண்டிருந்தவன் அவன். தொழிலாளிகளுக்கே மிகுந்த ஆதாயம் என்றால், முதலாளியாகிய இவனுக்கு எவ்வளவு பெரும் ஆதாயம் இருந்திருக்குமென்று அப்படியே மனக்கணக்கு போட்டுக் கொள்ளுங்கள்.

கர்த்தருடைய வசனம் பலமாய் விருத்தியடைந்து மேற்கொண்டதினால் விக்கிரக வணக்கம் வேகமாக மங்கிவருவதை இவனால் தாங்க முடியவில்லை. அதற்கு காரணம், தியானாளின் மீது இவனுக்கு இருந்த அதீத பக்தி அல்ல. மாறாக, வெகு வருமானம் தந்த தனது தொழில் எங்கே படுத்துக் கொள்ளப் போகிறதோ என்ற பயம்தான். ஆனால், இந்த உண்மையை வெளியே சொல்லி ஆதரவு தேட முடியாது. ஆகவே, கம்யூனிசம் இல்லாத

அந்த நாட்களிலேயே தன்னையொரு தொழிற்சங்கவாதியாக மாற்றிக்கொண்டு இவனிடத்தில் தொழில் செய்கிறவர்களையும், இவனைப்போல் தொழில் செய்கிறவர்களையும் திட்டமிட்டு உசுப்பி விடுகிறான். நம்முடைய தொழில் அற்றுப்போகும்படி யான அபாயம் நேரிட்டிருக்கிறதென்று கூச்சல் போட்டதோடல் லாமல், மகாதேவியாகிய தியானாளுடைய கோவில் பற்றியும், அவளுடைய மகத்துவம் அழிந்து போவதுபற்றியும் பேசுகிறான். பிழைப்பு பிரச்சனை பற்றி மட்டும் பேசினால், பட்டணத்தாரின் பரிவு கிட்டாதென்பதால், மிக லாவகமாக தன்னுடைய சோத்துப் பிரச்சனைக்கும், ஜனங்களின் பக்தி பிரச்சனைக்கும் முடிச்சுப் போட்டுவிடுகிறான். அதன்மூலம் அங்கே அவனுக்கு வெற்றியும் கிடைத்துவிடுகிறது. ஆம், கிட்டத்தட்ட ஒட்டுமொத்த பட்டண மும் கோபத்தால் நிறைந்தது. கலக உணர்வு பட்டணம் முழுமை யையும் கவ்விக்கொண்டது. எபேசியருடைய தியானாளே பெரிய வள் என்று சத்தமிட்டு தங்கள் மூடப் பக்தியை தீர்த்துக்கொள்ள முற்பட்டனர்.

கலகம் உச்சத்தை அடைந்தபோது, பவுலுக்கு வழித்துணை யாய் வந்த மக்கெதோனியராகிய காயுவையும், அரிஸ்தர்க்கு வையும் அவர்கள் இழுத்துக்கொண்டு ஒருமனப் பட்டு அரங்க சாலைக்குள் பாய்ந்தோடினார்கள். அவர்களுக்கேற்பட்ட கதி யைக் கண்டு பதறிப்போன பவுல், உடனடியாக உள்ளே போய் அவர்களுடன் சேர்ந்து கொள்ள முயற்சித்தான். ஆனால், சீடர்கள் அவனைத் தடுத்து நிறுத்தினர். அதுமாத்திரல்ல, அவனுக்கு நண்பர்களாயிருந்த ஆசிய நாட்டு தலைவர்களில் சிலரும் அவனு டைய முயற்சி குறித்து எச்சரித்தனர். வேறுவழியில்லாமல் அவரும் அதை ஏற்றுக் கொண்டார். அரங்க சாலைக்குள் இழுத்துச் செல்லப்பட்ட இருவர் பற்றிய விவரம் நமக்குச் சொல்ல ப்படவில்லை. ஒருவேளை அவர்கள் உயிருக்கும், பவுலடி யாரின் உயிருக்கும் அங்கே எக்கச்சக்க ஆபத்து நேர்ந்தி ருந் தாலும், அவர்கள் மரித்துப்போனார்கள் என்று சொல்வதற்கு நமக்கு எந்த தடயமும் இல்லை. எப்படியோ கலகம் அமர்ந்த பின்பு, பவுல் சீசரை தன்னிடத்திற்கு வரவழைத்து வினவிக் கொண்டு மக்கெதோனியாவுக்கு போகப் புறப்பட்டான். (அப் 20:1).

சரி, இப்பொழுது பவுலுக்கும் அவனோடிருந்தவர்களுக் கும் நேர்ந்த இந்த சம்பவத்திலிருந்தும், இதைச் சொல்லுவதற்கு அவர் பயன்படுத்திய வசனப்பகுதியிலிருந்தும் நாம் நமக்கு பயன்படும் சில பாடங்களை கற்றுக் கொள்ளவோம்.

## I. பவுலுக்கு நேர்ந்த தீமையின் மாயத் தோற்றம்

...தார்...றார்...பார் - என்பதை எடுத்துரைக்க பவுல் மனதிலே கொள்ளும் நிகழ்ச்சியிலிருந்து, நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற முதல் பாடம், தீமையும் சில நேரங்களில் ஜெயிப்பது போலத் தோன்றும் என்பது.

எபேசு பட்டணத்தை சத்தியத்தால் நிரப்ப தேவன் பவுலடியாரை பலமாகப் பயன்படுத்தியபோது, அசத்தியம் தள்ளாடி தடுமாறியது. மக்களின் ஆன்மீக சூனியத்தை மூலதானமாகக் கொண்டு வியாபாரம் செய்த தெமேத்திரியுவுக்கும், அவன் கூட்டாளிகளுக்கும் பலத்த அடி விழுந்தது. பெருத்த வருமானமும் அது பெற்றுத் தந்த வெற்று மரியாதையும் மறைந்துபோகும் நிலை தோன்றியது. இங்கே அவன், என் வருமானமும் அது பெற்றுத்தந்த மரியாதையும் போச்சு. வாங்க எல்லோரும் வீதியில் இறங்கி போராடலாம் என்று கூப்பாடு போட்டிருந்தால் எத்தனைபேர் வந்திருப்பார்கள்? சொல்லுங்கள். ஆகவே, அவன் தீர்க்கமாக சிந்தித்து சொந்தப் பிரச்சனையை பொதுப்பிரச்சினையாக்க முயற்சித்தான். அதற்காக அவன் கண்ணுக்குப் பெரிதாகத் தெரிந்தது மக்களின் மத உணர்வு. லேசாக பற்ற வைத்தான், குபீரெனப் பிடித்துக் கொண்டது. ஆஹா, திட்டம் கனகச்சிதமாக நிறைவேறி, வெற்றியும் அவன் கணக்குப்படி கிடைத்துவிட்டது. பட்டணம் முழுவதும் கலகத்தால் நிறைந்த போது தெமேத்திரியு என்ன நினைத்திருப்பான்? பிரச்சினை தீர்ந்தது. அரங்க சாலைக்குள் போன இரண்டு பேரும் அவுட். பவுலும் தப்பிக்க முடியாது. இனி வியாபாரம் படுஜோர் என்று தானே எண்ணியிருப்பான். ஆனால், அவன் நினைத்த மாதிரி காரியங்கள் நடந்ததாகத் தெரியவில்லை. ஆம், அவ்விருவருக்கும் உயிர்ச்சேதம் ஏற்பட்டதாகவோ, பவுலுக்கு வேறு சேதம் எதுவும் ஏற்பட்டதாகவோ வேதாகமத்தில் இல்லை. ஆகவே, தெமேத்திரிதியுவின் சதியை தேவன் முறியடித்தார் என்று நாம் நம்புவதற்கு அங்கே இடமுண்டு.

அன்பானவர்களே, இச்சூழலை நாம் நம்முடைய வாழ்க்கையோடும் இன்றைய நடைமுறைகளோடும் ஒப்பிட்டுப் பார்த்தால், அப்படியே பொருந்துவது நன்றாகவே தெரியும். எத்தனையோ சமயங்களில், தீமையும், தீமை செய்கிறவர்களும் நம்முடைய கண்களுக்கு முன்பாக வெற்றி பெறுவது போலத் தோன்றும். அதற்கான ஆதரவும், அவர்களுக்கான ஆதரவும் பெருந்திரளாகப் பெருகுவது போலவும் தெரியும். இனி அவ்வளவுதான் “முடிந்தோம்” என்று எண்ணவும் தோன்றும். ஆனாலும், தேவனுக்கு ஏதாவது சிறப்பு நோக்கங்கள் இருந்தாலொழிய தம்முடையவர்களை விட்டு அவர் விலகுவதில்லை. உதாரணமாக, யோசேப்பை எடுத்துக்கொள்ளுங்கள். நீதியாக நடந்த அவன் வாழ்க்கையில் அவனுக்கு நேர்ந்தவைகளைக் கவனித்தால் “இனி யோசேப்பு அவ்வளவுதான்” என்பது போலவே தோன்றியது. படு குழியில் போட்டது (ஆதி 37:24), சிறைச்சாலையில் தள்ளியது (ஆதி 39:20) போன்ற இவைகள் எல்லாம் இன்னும் யோசேப்புக்கு வாழ்வுண்டு என்றா சொல்லிற்று? இல்லை, “முடிந்தான்” என்றா தானே சொல்லியது. தீமை தலைவிரித்தாடினபடியால் யோசேப்பின் தேவன் எங்கே? என்று கேட்கும்படி கூடச் செய்தது. ஆனால், முடிவு? முற்றும் வேறாகத்தானே இருந்தது. சிங்கக் கெபி தானியேலும் (தானி 6:16,17)

அக்கினிச் சூளை சாத்ராக், மேஷாக் ஆபேத்நேகோ போன்ற வர்களும் (தானி 3:21) நமக்கு இதைத்தானே சொல்லுகிறார்கள்.

ஆகையால், அருமையானவர்களே, கூடுகிற கூட்டத்தைப் பார்த்தும் அவர்களின் ஆர்ப்பாட்டத்தைப் பார்த்தும், எதிரே தெரிகின்ற சூழலைப் பார்த்தும் நாம் ஒரு போதும் கலங்கத் தேவையில்லை. ஆவிக்குரிய ரீதியிலும், சரீரப் பிரகாரமாகவும் இதுதான் உண்மை. தேவனுக்கு எதிராக இருப்பவர்களுக்கு, சத்தியத்தை நேசியாதவர்களுக்கு, உண்மை சத்தியத்தை போதிக் காதவர்களுக்கு, உண்மை சத்தியத்தின்படி வாழாதவர்களுக்கு கூட்டம் சேருவது போலும், வெற்றி கிடைப்பது போலும் தோன றும். ஆனாலும் முடிவு, அவர்கள் நினைப்பது போல் இருக்காது. தேவன் ஒரு நாளைக் குறித்திருக்கிறார் (அப். 17;30) பிதாவின் சித்தப்படி செய்கிறவர்களுக்கே பரலோக பாக்கியமும் வாடாத ஜீவகிரீடமும் கிடைக்கும். ஆகவே, சோர்ந்து போக வேண்டாம்.

## II. பவுலின் தைரியமும், சகோதர சிநேகமும்

...தார் ...றார் ...பார் என்பதை எடுத்துரைக்க பவுல் மனதிலே கொள்ளும் நிகழ்ச்சியிலிருந்து நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற இரண்டாவது பாடம், அப்போஸ்தலன் பவுலின் தைரியமும், சகோதர சிநேகமும்.

பொய்ப் பக்தியாளர்களின் மதவெறி உச்சத்தை அடைந்து, பவுலுக்கு வழித்துணையாக வந்த மக்கெதொனியராகிய காயுவையும், அரிஸ்தர்க்குவையும் ஒரு மனப்பட்டு இழுத்துக் கொண்டு அரங்க சாலைக்குள் பாய்ந்தோடினார்கள். இந்தக் காயு, அப்போஸ்தலனாகிய பவுலாலே கொரிந்து பட்டணத்தில் மன மாற்றப்பட்டவன் (1 கொரி. 1;15) உயரிய பண்புகளில் ஒன்றா கிய உபசரிக்கும் பண்புக்கு இவன் சொந்தக்காரன் (ரோம. 16;23) அரிஸ்தர்க்கு பவுலுடனே கூட ரோமச் சிறையில் இருந்தவன் (கொலோ. 4:10) இப்படிப்பட்ட சகோதரர்களின் உயிருக்கு ஆபத்து என்றவுடன் அவன் எப்படி துடியாய்த் துடித்திருப்பான் என்று எண்ணிப்பாருங்கள். அவர்களுடைய உயிருக்கு ஒன்றும் நேர்ந்து விடக்கூடாது என்று அவர்களுக்காக, தேவனிடத்தில் எப்படி மன்றாடியிருப்பான் என்றும் எண்ணிப்பாருங்கள். புழு வாய்த் துடித்ததும், ஊக்கமாய் மன்றாடியதும் மாத்திரம் தானா அவன் செய்தது? இல்லை, கூட்டத்துக்குள்ளே போகவும் முயற் சித்தான். அவர்களோடு சேர்ந்து தானும் பாடநுபவிப்பதற்கு தன்னை ஒப்புக் கொடுத்தான். அப்போஸ்தலன் பவுலின் இச்செய லை நாம் கவனிக்கும் போது, நமக்கு இரண்டு காரியங்கள் தெளி வாகிறது. முதலாவது, அவன் தைரியமுள்ளவனாயிருந்தான் என்பது. இரண்டாவது, சகோதரர்களுக்காக எதை வேண்டுமா னாலும் செய்யத் தயாராயிருந்தான் என்பது. ஒருவேளை, நமக்கு இப்படியொரு சூழ்நிலை ஏற்பட்டிருக்குமானால் ஸ்கேவாவின் குமாரர் பாணியில் எல்லாவற்றையும் விட்டு ஓடியிருப்போம் அப்படித்தானே!.

அன்பானவர்களே, இன்றைக்குக் கர்த்தருடைய பிள்ளை கள் எத்தனைபேரிடத்தில், அங்கே பவுலிடம் காணப்பட்ட தைரி யமும், சகோதர சிநேகமும் உள்ளது. தேவனை மெய்யாய் நேசித்

தவர்கள் தைரியமுள்ளவர்களாகவும் சகோதரர்களினிமித்தம் எதையும் செய்ய தயார் நிலையிலிருந்தவர்களாகவுமே இருந்துள் ளனர்.

புறச்சூழ்நிலை எதுவும் தங்களை பாதிக்க அவர்கள் அனுமதிப்பதில்லை. தாவீது சொல்லும் போது, உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்து போவேன்; என் தேவனாலே ஒரு மதி லைத் தாண்டுவேன் (2 சாமு.22;30) என்று கூறுகிறான். இந்த தைரியத்தை நாம் விலை கொடுத்தெல்லாம் வாங்க முடியாது. ஜெபத்தினாலும் (எபே. 6;18,19) நீதியான வாழ்க்கையின் மூலமும் (நீதி. 28;1) பூரண அன்பினாலும் (1 தீமோ.4;12) தேவ னோடு ஒட்டி உறவாடுவதின் மூலமும் தான் (எபே.4;18) நாம் பெற்றுக்கொள்ள முடியும். இப்படிப்பட்ட தைரியத்தை நாம் பெற்றுக் கொண்டால், எந்தச் சூழநிலைக்கும் நாம் அஞ்ச வேண்டிய தில்லை.

அடுத்து பவுலின், சகோதர சிநேகத்திற்கு காரணம் அவர்களோடு அவனுக்கிருந்த தனிப்பட்ட பழக்கம் என்று எண்ணுகிறீர்களா? ஒரு வேளை, அது காரணமே அல்ல என்று நாம் ஒதுக்கிவிடமுடியாது. ஆயினும், அதற்கும் மேலான காரணம் இருக்கிறதென்பதை நீங்கள் மறந்துவிடாதீர்கள். சகோதர சிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள் என்று தேவன் கட்டளையிட்டிருக்கிறார் (ரோமர். 12;10) நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்று இயேசு ஆண்டவரும் கட்டளையிட்டிருக்கிறார். மேலும், ஒருவர் மேலொருவர் அன்பா யிருக்க வேண்டுமென்று ஆவியானவர் மூலம் நாம் வசனத்தால் போதிக்கப்பட்டிருக்கிறோம் (1 தெசலோ. 4;9) பவுலடியாரின் அன்புக்கு இவைகள் தான் பிரதான காரணங்கள். இடுக்கணில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான் என்று வசனம் (நீதி. 17:17) சொல்லும்போது, அதற்கு மாறாக சகோதரர்களுக்கு இடுக்கண் செய்வதையே தங்கள் ஊழியமாக சிலபேர் கொண் டுள்ளனர். பிறருக்கு இடுக்கண் செய்யாவிட்டால் ஒருவேளை அவர்களுக்கு நித்திரை வராதோ! ஆனால் நாம் அப்படிப்பட்ட வர்களாயிராமல், அப்போஸ்தலன் பவுலைப் போலிருப்போமாக.

## III. பவுலுக்கு தேவன் மீதான அபார நம்பிக்கை

எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்ற பவுலடியாரின் வார்த்தைகளி லிருந்து நாம் கற்றுக் கொள்ளுகின்ற இன்னுமொரு பாடம், தேவன் மீது நாம் எந்தச் சூழ்நிலையிலும் நம்பிக்கை கொள்ள வேண்டுமென்பது.

ஆசியாவில் தங்களுக்கு நேர்ந்ததைக் குறித்து கொரிந்தி யருக்கு எழுதும்போது, ஆவியானவர் பயன்படுத்தின வார்த்தை களைப் பாருங்கள் ...பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப் போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று. நாங்கள் எங்கள் மேல் நம்பிக்கையா யிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன் மேல் நம்பிக்கை யாயிருக்கத்தக்கதாக மரணம் வருமென்று நாங்கள் எங்களுக் குள்ளே நிச்சயத்திருந்தோம். (2 கொரி 1:8,9) பவுலும் அவனோ டிருந்தவர்களும், தேவன் மீது எப்படிப்பட்ட நம்பிக்கை கொண்டி ருந்தனர் என்று பாருங்கள்! பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் உண்டானபோதும், பிழைப்போம் என்கிற நம்பிக்கை

அற்றுப் போன நிலையிலும், தேவன் மீது நம்பிக்கை, அப்பப் பா! உங்களாலும், என்னாலும் இது முடியுமா? முடியும். ஆனால், எது முடியும்? எழுதியிருப்பதைப் படிக்க முடியும், சில நேரங்க ளில் பேச முடியும், ஆனால், அப்படியொரு சூழ்நிலை வந்தால்?!

அப்போஸ்தலன் பவுல், தேவன் மீது நம்பிக்கையாயிருந் தோம் என்று சொல்லாமல், மரித்தோரை எழுப்புகிற தேவன் என்று சொல்வதைத் தயவுசெய்து கவனிக்கத் தவறிவிடாதீர்கள். மரித்தாலும் உயிர்ப்பிக்கப்படுவோம் என்ற நம்பிக்கையில் அவருக்கு உயிருள்ளளவும், எள்ளளவும், சந்தேகமிருந்ததில் லை. ஆகவேதான், கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதா யம் என்றும் (பிலி. 1:12-1). கர்த்தர் எனக்கு சகாயர், நான் பயப் படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான்... (எபி.13:6) என்றும் சொல்ல முடிந்தது (எபிரெய ஆசிரியர் பவுலாகத்தான் இருக்க வேண்டுமென்று பொதுவாக நம்பப்படுகிறது).

இன்றைக்கு தேவன் மீது நம்பிக்கை வைத்திருக்கிறோம் என்று சொல்லுகிறவர்களில் அநேகர் துணிகரமாகப் பாவங்கள் செய்வதற்கான காரணங்களில் ஒன்று, அவர் மரித்தோரை எழுப்புகிற தேவன் என்ற எண்ணம் இல்லாததே. ஆகவே தான், ஆனது ஆகட்டும் என்று எண்ணி சகட்டு மேனிக்கு தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். என்ன நடந்தாலும் மரணம் தானே எல்லையென்று நினைக்கிறார்கள். நம்முடைய தேவன் மரித்தோரை எழுப்புகிற தேவன் என்பது எல்லோருக்கும் எப்போதும் நினைவில் இருக்குமானால், பாவம் செய்ய நேரும் போது பயம் வரும். சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்கா வது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லா ரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும் (2 கொரி 5:10) என்று எண்ணத் தூண்டும். ஆகவே, நம்முடைய தேவன் மரித்தோரை எழுப்புகிற தேவன் என்ற எண்ணத்தோடு எப்போதும் வாழ வேண்டும்.

அப்படி நாம் வாழ்வோமானால், பாவச்சூழ்நிலைகளில் இருந்து நம்மை விலக்கிக் கொள்ள முடியும். இப்படி பாவத்தை விலக்குவது தேவன் விரும்பும் பரிசுத்த வாழ்விற்கு அடிகோலும். பரிசுத்த வாழ்வு, பரலோக பாக்கியத்திற்கு பாதை வகுக்கும். அதற்குமேல் நமக்கு என்ன வேண்டும்?.

ஆகையால் அருமையானவர்களே..தார்..றார்..பார் என்ற இந்த தலைப்பின் கீழாக நாம் கற்றுக்கொண்ட பாடங்களை மனதில் இருத்தி, அதற்கேற்ற வாழ்க்கையை நடத்துவோம். தேவ சமாதானம் உங்களுடன் இருப்பதாக! ஆமென்!!

**S. ராஜநாயகம்**

**ஜெபியுங்கள்! ஊக்கமாக ஜெபியுங்கள்!!**

**எதிர்வரும் அக்டோபர் திங்கள் 2,3-2009** [அரசு விடுமுறை நாட்கள்] ஆகிய தேதிகளில் காங்கயத்தில் நடைபெறும் **பன்னிரெண்டாம் வேதாகம கருத்தரங்கிற்காக** தனிப்பட்ட ரீதியிலும், குழுவாகவும், குடும்பமாகவும், சபை யாகவும் பாரத்தோடு ஜெபியுங்கள். – ஆசிரியர்

# தேவையிலிருப்போருக்கு உதவுவது எப்படி?

இப்பொழுது நாம் இந்தப் பாடத்தில், ஒரு பிராந்திய சபை சம்பந்தப்பட்ட மற்றொரு காரியத்தை அதாவது, "தேவையிலிருப்போருக்கு உதவுவது எப்படி?" என்று பார்க்க உள்ளோம்.

தங்களுடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படும்படியாய், எல்லா மனிதருக்கும் கர்த்தர் தேவையென்பது நமக்குத் தெரியும். ஆனால், ஒரு பிராந்திய சபை தொடங்கப்பட்டு வளர ஆரம்பித்து விட்டால் அப்பிராந்திய சபையில், சரீரப்பிரகாரமான தேவையிலிருப்பவர்கள் இருப்பார்கள். அப்பட்டணத்திலும், தேவையிலிருப்போர் இருக்ககூடும். நற்செய்தியை அறிவிப்பது தான், சபையின் பிரதான வேலையாக இருந்தபோதிலும், சபையானது மனிதர்களைக் கொண்டதாக இருக்கிறபடியால், சபைக்கு வெளியே இருக்கிற மக்களோடும் தொடர்பு கொண்டாக வேண்டியிருப்பதால், சபையானது கண்களை இறுக்கி மூடிக் கொண்டு, மக்களுடைய சரீரத் தேவைகளைக் காணாமலிருக்க முடியாது.

இயேசு, "அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும், வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறது போல அவர்களை அவர் பிரித்து, செம்மறியாடுகளைத் தமது வலது பக்கத்திலும் வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார். அப்பொழுது, ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து; வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக்கொள்ளுங்கள். பசியாயிருந்தேன். எனக்குப் போஜனங் கொடுத்தீர்கள், தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள், அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள், வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங் கொடுத்தீர்கள், வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள், காவலிலிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள் என்பார். அப்பொழுது நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக, ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உமக்குப் போஜனங் கொடுத்தோம்? எப்பொழுது உம்மை அந்நியராக கண்டு உம்மைச் சேர்த்து கொண்டோம்? எப்பொழுது உம்மை வஸ்திரமில்லாதவராகக்கண்டு உமக்கு வஸ்திரங்கொடுத்தோம்? எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும் காவலிலிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள். அதற்கு ராஜா பிரதியுத்தரமாக மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லு

கிறேன் என்பார். அப்பொழுது, இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர், சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு பிசாசுக் காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டி ருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள். பசியாயிருந்தேன், நீங்கள் என்னைச் சேர்த்துக் கொள்ளவில்லை வஸ்திரமில்லா திருந்தேன். எனக்குப் போஜனங் கொடுக்கவில்லை, தாகமாயி ருந்தேன், நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை அந்நியனா யிருந்தேன், நீங்கள் எனக்கு வஸ்திரங் கொடுக்கவில்லை. வியாதியுள்ளவனாயும், காவலிலடைக்கப்பட்டவனாயும் இருந் தேன், நீங்கள் என்னை விசாரிக்க வரவில்லையென்பார். அப்பொ ழுது, அவர்களும் அவருக்குப் பிரதியுத்திரமாக, ஆண்டவரே, உம்மைப் பசியுள்ளவராகவும், தாகமுள்ளவராகவும், அந்நியராக வும், வஸ்திரமில்லாதவராகவும் வியாதிப்பட்டவராகவும், காவ லிலடைக்கப்பட்டவராகவும் நாங்கள் எப்பொழுது கண்டு உமக்கு உதவி செய்யாதிருந்தோம் என்பார்கள். அப்பொழுது அவர் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக மிகவும் சிறியவர்களாகிய இவர் களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்திர்களோ அதை எனக்கு செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்பார். அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கி னையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடைய வும் போவார்கள் என்றார்." (மத்.25:31-46).

புதிய ஏற்பாட்டில் உள்ள மத்தேயு, மாற்கு, லூக்கா போன்ற நூல்களை நீங்கள் படித்திருந்தால், இயேசு இரக்கமுள்ளவராயும், சரீரத் தேவையிலிருந்தவர்களுக்கு உதவ வேண்டுமென்ற எண்ண முடையவராகவும் இருந்தார் என்பது உங்களுக்குத் தெரியும், மேலே நாம் இப்பொழுது பார்த்த பகுதியில் இயேசு, அவருடைய ஜனங்கள், சரீரத் தேவையுள்ளவர்களிடம் கரிசனையும், அனுதாப மும் உள்ளவர்களாக இருக்க வேண்டுமென்றார் என்பதைக் காண முடியும் என நினைக்கிறேன். தேவையிலிருப்போருக்கு உதவு வதன் மூலம் உண்மையில் நாம் அவருக்கு உதவி செய்கிறோம் என்று கூறுகிறார். இதையே வேறுவிதமாகச் சொன்னால், சரீரத் தேவையிலிருப்போரை நாம் உதாசீனம் செய்தால், கிறிஸ்துவை நாம் புறக்கணிக்கிறோம் என்று பொருள். இப்பொழுது நாம் வாசித்தபடி தேவையிலிருப்போர் விஷயத்தில் நாம் என்ன செய் கிறோம் என்பதைச் சார்ந்துதான், நமது ஆத்துமாவின் முடிவு இருக்கும்.

சபையானது ஸ்தாபிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், பெந்தெ கொஸ்தே பண்டிகையைக் கொண்டாடும்படியாக யூதர்கள் உலகம் முழுவதிலும் இருந்து எருசலேமுக்கு வந்திருந்தனர் என்று வேத வசனம் கூறுகிறது. அப்பொழுது அங்கே சுவிசேஷம் பிரசங் கிக்கப்பட்டதினால் மூவாயிரம் பேர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, சுவிசேஷம் மீண்டும், மீண்டும் பிரசங்கிக்கப்படுவதைக் கேட்கும் படியாகவும், ஒருவரோடொருவர் ஐக்கியம் ஏற்படுத்திக் கொள் வதற்காகவும் அங்கே தங்க நேர்ந்த சமயத்தில், அச்சகோதரர்கள் சில தேவைகளை உணர ஆரம்பித்தனர். அவர்களின் சரீரத்

தேவைகளை உள்ளூர் சகோதரர்கள் சந்தித்து, நிறைவேற்றினர். இது குறித்து வேதாகமம், விசுவாசிகளெல்லாரும் ஒருமித்து சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள். காணி யாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள் என்று கூறுகிறது. (அப்.2:44,45) பின்பு ஒரு சமயம் இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் இவ்விதம் வாசிக் கிறோம். "விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதய மும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்ல வில்லை, சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது. கர்த்தரா கிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சிக்கொடுத்தார்கள், அவர்களெல்லார் மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது. நிலங்களையும், வீடுக ளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவை களின் கிரயத்தைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத் திலே வைத்தார்கள். அவனவனுக்குத் தேவையானதற்குத் தக்க தாய் பகிர்ந்து கொடுக்கப்பட்டது, அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை. (அப்.4:32-35) இங்கே கிறிஸ் தவர்கள், ஒரு சாதாரணச் சூழ்நிலையில், தங்களுடைய சொத்து, சுகங்களை விற்று, தங்களுக்குள் பங்குபோட்டிருக்கமாட்டார் கள். ஆனால், அங்கே ஒரு விசேஷ தேவை இருந்தது. அந்த விசேஷத் தேவையினிமித்தம் அவர்கள் அப்படிச் செய்தனர். செய்த எல்லாவற்றையும் அவர்கள் மனமுவந்து செய்தனர்.

இந்தக்காலகட்டத்தில், அப்போஸ்தலர்களும், சீஷர்களுக்கு உதவுவதில் ஈடுபட்டனர். அந்நாட்களிலே, சீஷர்கள் பெருகின போது கிரேக்கரானவர்கள் தங்கள் விதவைகள் அன்றாட விசார ணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லையென்று எபிரெய ருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள்.

அப்பொழுது பன்னிருவரும் சீஷர் கூட்டத்தை வர வழைத்து, நாங்கள் தேவ வசனத்தைப் போதியாமல், பந்தி விசாரணை செய்வது தகுதியல்ல. ஆதலால் சகோதரரே, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள், அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம். நாங்களோ ஜெபம் பண்ணுவதி லும், தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் தரித்திருப் போம் என்றார்கள் (அப்.6:1-4) என வாசிக்கிறோம். அங்கே அப்போஸ்தலர்கள் 12 பேர் மட்டுமே இருந்தனர். ஆனால், சீஷர் களோ அநேகர் பேர் இருந்தனர். பரிசுத்த ஆவியின் வல்லமை அப்போஸ்தலர்கள் குறிப்பிட்ட சில காரியங்களைச் செய்யும் படியாய் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. அவர்கள் ஜனங் களின் சரீரத் தேவையைக் குறித்து கரிசனையுள்ளவர்களாயிருந்த போது, இக்காரியத்தை செய்ய அநேகர் இருந்தார்கள். ஆகை யால் கர்த்தர் இவர்கள் செய்யவேண்டும் என எதிர்பார்த்த காரியங்களை செய்ய முடிந்தது. அப்போஸ்தலரும் அதையே செய்தார்கள்.

1. கொரி. 16:1,2ல் கலாத்தியா மற்றும் கொரிந்துவிலுள்ள சகோதரர்களிடமிருந்து எருசலேமில் உள்ள ஏழைப் பரிசுத்தவான்களுக்கு பணம் சேர்க்கிறார். பிறகு, அவர் எழுதும்போது, ஒரு சபையில் விதவைகள் இருந்தால் அவர்களுடைய குடும்பத்தார் அவர்களை கவனித்துக் கொள்ளவேண்டும். ஆனால் அந்த விதவைக்கு உதவும்படியாய் ஒருவரும் இல்லையானால், தன்னுடைய தேவையைத் தானே சந்தித்துக் கொள்ள முடியாத நிலை இருந்து. அறுபதும், அதற்குமேற்பட்ட வயதுடையவர்களாயிருந்து, விசுவாசமுடையவராயிருந்தால், அப்பொழுது, சபையானது அவர்களுக்கு உதவி செய்யவேண்டும். (1.தீமோ.5) அதே சமயத்தில், சபைக்கு அந்த பாரத்தை கொடுப்பதற்கு முன்பாக, இந்த வசனம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். “ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத்தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான். (1.தீமோ. 5:8) வேறொரு சமயத்தில் பவுல் ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்கு கட்டளையிட்டோமே. (2.தெச.3:10) என்று கூறியுள்ளார்.

இப்பொழுது, ஒரு பிராந்திய சபையில், இளவயதுள்ளவர்களாக அல்லது முதியவர்களாக, சிலரோ அல்லது அநேகரோ இருந்தால், தேவையிலிருப்போருக்கு, அதாவது, அவர்கள் உதவிக்குப்பாத்திரவான்களாயிருந்தால் சபையானது உதவ வேண்டும். ஒருவேளை, அவர்கள் தற்காலிகமாக வேலையை இழந்தவராக இருக்கலாம், தீ விபத்தில் வீட்டைப் பறி கொடுத்தவராக இருக்கலாம் அல்லது இப்படிப்பட்ட காரணங்கள் வேறு ஏதாவது உடையவராக இருக்கலாம். ஆனால், பிராந்திய சபை அதன் பொருளாதார நிலைக்கேற்பத் தான் கொடுக்க முடியும். சபையின் அங்கத்தினர்கள், ஏதாவதொரு அவசரமான, திடீரென்று ஏற்பட்ட தேவையை தவிர மற்றவைகளுக்கு சபை உதவ வேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது. மற்ற சபையாரிடம் சிலவற்றிற்கு உதவிகோருதல் என்று பார்க்கும் போது, அது ஜீவனா அல்லது மரணமா என்ற சூழ்நிலை வரும்போதுதான் அப்படிச் செய்யவேண்டும். சபையிலிருக்கும் சகோதரருக்கோ அல்லது சபையைச் சாராத ஒரு நபருக்கோ உதவி செய்கிறபோது, அது ஜெபத்தோடும், சபையின் பெயராலும் தான் செய்யப்பட வேண்டும். அப்படிச் செய்வது, அச்சமுதாயத்தில் ஒரு பிராந்திய சபையின் மரியாதையை உயர்த்தும், தனிப்பட்டவர்களும் தங்களால் முடியும்போது தனிப்பட்ட முறையில் பிறருக்கு உதவி செய்யலாம்.

**J.C. CHOATE** **J.C. சோட்**

பெண்கள் பகுதி

# சாறிபாத் விதவை

பழைய ஏற்பாட்டிலுள்ள ராஜாக்களின் புஸ்தகம் பதினேழாம் அதிகாரத்தில் ஒரு புறஜாதிப் பெண் ஒளிந்திருக்கிறாள். அவள் வாழ்ந்த காலம் இஸ்ரவேலை ராஜாக்கள் ஆண்ட காலம். இஸ்ரவேலை சில நல்ல ராஜாக்கள் ஆண்டிருந்தாலும் இவளுடைய நாட்களில் இஸ்ரவேலை ஆண்ட ராஜா மிகப் பொல்லாதவன். தெய்வ பயமில்லாத, தன் மனைவியின் சொல்லுக்கு மண்டியிட்டு இஸ்ரவேலை அந்நிய தேவர்களை நோக்கி வழி நடத்தினான். ஒரு கட்டத்தில் தேவன் தன்னுடைய மகிமையை இஸ்ரவேலுக்குகாட்ட விரும்பி தீர்க்கதரிசிகளிலே சிறப்பிடம் பெற்றவனாகிய எலியாவை இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபிடம் பேசும்படியாக அனுப்பினார்.

எலியா ஆகாபை நோக்கி, என் வாக்கின்படியேயன்றி இந்த வருஷங்களிலே பனியும், மழையும் பெய்யாதிருக்குமென்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்றான். (1 ராஜா 17:1) அவனுடைய வாக்கின்படியே தேசத்திலே மழை பெய்யாமல் கடுமையான பஞ்சம் வந்தது. புதிய ஏற்பாட்டு ஆசிரியராகிய யாக்கோபு தன்னுடைய நிருபத்தில் இவ்வாறாக எழுதியுள்ளார். எலியா என்பவன் நம்மைப்போல பாடுள்ள மனுஷனாயிருந்தும் மழைபெய்யாதபடிக்கு கருத்தாய் ஜெபம் பண்ணினான். அப்பொழுது மூன்று வருஷமும், ஆறு மாதமும் பூமியின் மேல் மழை பெய்யவில்லையென்று (யாக். 5 :17)

ஆனால் எந்நிலையிலும் தன்னுடைய உண்மைப் பிள்ளைகளை கைவிடாத நமது தேவன் அப்பொழுது ஏற்பட்ட கடுமையான பஞ்சத்திலிருந்து தமது தாசனைக் காப்பாற்ற விசேஷித்த ஏற்பாட்டைச் செய்தார். அவனைக் கேரீத் ஆற்றண்டைக்கு போகச் சொல்லி, பறவைகளிலே அற்பமாய் எண்ணப்படும் காக்கையைக் கொண்டு இரண்டு வேளையும் சிறப்பாக போஷித்தார். இரண்டு வேளையும் நிம்மதியாக சாப்பிட்டு ஆற்றுத் தண்ணீரை குடித்து நாட்களை கழித்து வந்தான்.

தொடர்ந்து மழையில்லாமல் போனபடியால் மழையை நம்பி ஓடிவரும் ஆற்றிலும் தண்ணீர் வற்றி விட்டது. அந்நிலையில் தன் பிள்ளையைப் பட்டினிபோட விரும்பாத தேவன் அவனுடைய சரீரத் தேவைகளை சந்திக்க ஒரு திட்டம் தீட்டி புறஜாதிப் பட்டணமாகிய சாறிபாத்துக்குப் போக பணித்தார். கர்த்தருடைய வார்த்தைக்கு தன்னை ஒப்புக்கொடுத்த எலியா கர்த்தரின் கட்டளைப்படியே அங்கு சென்ற பொழுது தான், மரித்து நூற்றாண்டுகள் பல ஆகியும் இன்னும் பேசிக் கொண்டிருக்கும் விதவையை சந்திக்கிறான். வேதாகமத்தில் அவளுடைய பெயர் இடம்பெறுவதற்கு கூட தகுதியில்லாதவளாக அன்றைக்கு அவள் இருந்துள்ளாள்.

அந்த சிறப்பான ஸ்திரீயோடு எலியா செய்த உரையாடல் விசேஷமானது. முற்றிலும் அறிமுகமில்லாத சற்றும் சம்மந்தமில்லாத இருவருக்கிடையே நடந்த உரையாடல் அது. தேவன்

தனக்காக யாரை ஆயத்தம் செய்து வைத்திருக்கின்றார் என்று தெரியாத நிலையில், நீண்ட தூர நடைப் பயணத்தால், விடாய்த்துப் போன நிலையில் இங்கே ஒரு சந்திப்பு ஏற்படுகிறது.

அப்பொழுது அந்த ஸ்திரீயினுடைய நிலையோ இன்னும் மோசமானது. அவள் ஒரு விதவை இந்நாட்களில் இருப்பதைப் போல் ஓய்வூதியமோ, முதியோர் காப்பகங்களோ, இன்னும் அரசாங்கத்தால் கிடைக்கும் சில பாதுகாப்புகளோ அப்பொழுது இல்லை. கடுமையான பஞ்சம், தன்னையும், தன் மகனையும் காப்பாற்ற முடியாத நிலையில் சாவின் எல்லைக்கு அவள் வந்து விட்டாள். அவளுடைய வார்த்தையின்படி அந்த நாள் தான் அவள் பூமியில் உயிரோடிருக்கும் கடைசி நாள் (1 இராஜா 17:12).

இந்தப் பின்னணியில் தான் சந்திப்பு ஆரம்பமாகிறது. எலியா அங்கே தயங்கி, தயங்கி முதலில் தண்ணீர் கேட்கிறான் (வசனம் 10) அவள் தண்ணீர் கொண்டுவர காலடி வைத்த பொழுது கொஞ்சம் அப்பமும் உன் கையிலே கொண்டுவா என்று கேட்டான். "அதற்கு அவள், பானையில் ஒரு பிடி மாவும், கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமேயல்லாமல் என்னிடத்தில் ஒரு அடையும் இல்லையென்று உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன். இதோ, நானும், என் குமாரனும் சாப்பிட்டுச் செத்துப்போக அதை எனக்கும், அவனுக்கும் ஆயத்தப்படுத்துகிறதற்கு இரண்டு விறகு பொறுக்குகிறேன் என்றாள்" (வசனம் 12).

அப்பொழுது எலியா அவளைப் பார்த்து, "பயப்படாதே, நீ போய் உன் வார்த்தையின்படி ஆயத்தப்படுத்து; ஆனாலும் முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டு வா; பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம்" (வ. 13) அது மாத்திரமல்ல எலியா, தொடர்ந்து அப்படிச் செய்தால் பானையின் மா செலவழிந்து போவதுமில்லை, கலசத்தில் எண்ணெய் குறைந்து போவதுமில்லையென்று இஸ்ரவேலின் தேவனாகி கர்த்தர் சொல்லுகிறார் என்றான். இஸ்ரவேலின் தேவனுடைய கர்த்தர் சொல்லுகிறார் என்று எலியா சொன்ன வார்த்தைகளை நம்பி அந்தச் சூழ்நிலையில் அவள் செயல்பட்டு பஞ்சம் தீருமட்டும் தன்னையும் தன் குடும்பத்தையும் காப்பாற்றிக் கொள்கிறாள் (வச.14, 15) கர்த்தா சொன்னபடியே பானையிலேமா செலவழிந்து போகவுமில்லை, கலசத்தில் எண்ணெய் குறைந்து போகவுமில்லை. அவளுக்கு ஆசீர்வாதம் இரண்டு மடங்காக அல்ல, பல மடங்காக கொடுக்கப்பட்டதென்று நாம் அறிகிறோம்.

பெயர் எழுதப்படக்கூட தகுதியில்லாத இந்த புறஜாதி விதவை, சாவின் விளிம்பிலே நின்ற பொழுது தேவனால் ஆசீர்வதிக்கப்பட்ட விதவை, 20ம் நூற்றாண்டின் இறுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்களாகிய நமக்கு சில அற்புதமான பாடங்களைக் கற்றுக் கொடுக்கிறாள்; கற்றுக் கொள்வோமாக!

முதலாவது, இவள் ஒரு புறஜாதிப் பெண்ணாக இருந்த பொழுது, அந்நியரை உபசரிக்க வேண்டுமென்ற நற்குணம் பொருந்தியவளாக இருந்துள்ளாள். எலியா இவளிடத்தில் வந்த பொழுது அவனுடைய ஒட்டுமொத்த தோற்றமே வித்தியாசமானதாக இருந்திருக்கும். ஏனெனில், அவன் வசித்தது காட்டுக்குள்,

அவன் உடுத்தியது தோல் உடை. இன்னும் சில வேறுபாடுகள் அவனிடத்தில் இருந்தது. அப்பொழுது இவளுடைய நிலையோ சாவை ருசிபார்க்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. அந்நிலையிலும் இவள் அந்நியரை உபசரித்துள்ளாள். இஸ்ரவேலின் தேவன் பேரில் ஆணையிட்டுச் சொல்கிறேன் என்று எலியா வாக்குக் கொடுத்தபோது அந்த இஸ்ரவேலின் தேவனைப் பற்றி இவளுக்கு அதிகம் தெரியாது.

ஒருவேளை நாமாக இருந்தால் என்ன எண்ணியிருப்போம்?. நம்மை தந்திரமாக ஏமாற்றி, இருப்பதை பிடுங்கி தின்னலாம் என் திட்டமிடுகிறான் என நினைத்திருப்போம். இவனிடம் பேசினால் வம்பு என வேகமாக நடந்திருப்போம். ஆனால, இந்த ஏழை விதவையோ அந்த நிலையிலும் உபசரித்துள்ளாள். அதன் மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டுமுள்ளாள். நாமும் கூட நம் வாழ்க்கையில் மற்றும் குறைவில் இருக்கிறவர்களுக்கு உதவி செய்யக் கூடியவர்களாக, உபசரிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். வேதாகமம் இக்குணத்தை பெரிதும் வரவேற்கிறது. எபிரெய ஆசிரியர் என்ன கூறுகிறார் என்று பாருங்கள் “அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள் அதினாலே சிலர் தேவதூதரையும் உபசரித்ததுண்டு” (எபி 13:2).

இரண்டாவதாக, பரிசுத்தவான்களுக்கு உதவி செய்யக் கூடிய மக்களாக இருக்க வேண்டும். அதுவும் முதலிலே அவர்களுடைய சரீரத் தேவைகளை சந்திக்கிறவர்களாக இருக்க வேண்டும். எலியாவை இவள் ஏதோ ஒரு விதத்தில் தேவனுடைய மனுஷன் என்று அறிந்து கொண்டாள். ஆகையால் தன்னுடைய தேவையைக் காட்டிலும் அந்த தேவ மனிதனின் தேவையைச் சந்திப்பது முதன்மையானது என எண்ணினாள். அவன் முதல் எனக்கு ஒரு அடையைச் செய்துவா என்று சொன்ன போது அப்படியே செய்தாள். அதன் மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டாள்.

இயேசுக் கிறிஸ்து இந்த பூமியில் இருந்தபோது “சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்” (மத்தேயு 10:24) ஆகவே நாமும் நம்முடைய வாழ்க்கையிலே இந்த விதவையைப் போல தேவனுடைய உண்மைப் பிள்ளைகளைக் கண்டறிந்து அந்த பரிசுத்தவான்களுக்கு உதவி செய்வோமானால் அந்த விதவையையும், அவள் வீட்டாரையும் ஆசீர்வதித்த பரலோகத்தின் தேவன், நம்மையும், நம் குடும்பத்தாரையும் ஆசீர்வதிப்பார் என்பதிலே எந்த சந்தேகமும் வேண்டாம்.

மூன்றாவதாக, கர்த்தரை நம்புகிற பிள்ளைகளுக்கு கடைசி நிமிடத்திலே கூட இரட்சிப்பு உண்டு என்பதை இந்த விதவையின் வாழ்க்கையிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். அவள் விறகு பொறுக்கினபொழுது இன்றைக்கு சாப்பிடுவதுதான் கடைசி ஆகாரம் என நினைத்தாள். ஆபிரகாம் ஈசாக்கை பலியிட்ட பொழுது கத்தி பிள்ளையாண்டாள் மேல் படவில்லையேயொழிய ஆபிரகாமின் மனதிலே ஈசாக்கை பலியிட்டு விட்டான். அதைப் போல இந்த விதவை சாகவில்லையே ஒழிய, சாவை ருசி பார்த்து விட்டாள். அந்த நிலையிலும் கர்த்தருடைய மனிதனின் வார்த்தைகளை நம்பினாள் காப்பாற்றப்பட்டாள்.

இதைத்தான் சங்கீதக்காரன் சொல்லும்பொழுது, “நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர் உமது கோலும்; உமது தடியும் என்னைத் தேற்றும்” என்று. ஆகவே நாம் நம்மு டைய வாழ்க்கையில் இதற்குமேல் இனி என்ன நடக்கப் போகி றது இனி யாரால் நம்மைக் காப்பாற்ற முடியும் என்று நினைக்கா மல் இறுதி மூச்சுவரை தேவனுக்கு உண்மையாக இருப்போம் என்றால், அவருக்குப் பயந்து நடப்போமானால் நாம் காப்பாற்றப் படுவது திண்ணம், ஆசீர்வதிக்கப்படுவது உறுதி.

இறுதியாக அவள் இவ்விதமாக ஆசீர்வதிக்கப்பட்டதற்கு ஒரு சிறப்பான காரணம் இருக்கிறதை மறந்துவிடக் கூடாது. 17ம் அதிகாரம் 15ம் வசனம் இவ்விதமாகச் சொல்லுகிறது. அவள் போய் எலியாவின் சொற்படி செய்தாள். அவளுடைய ஆசீர்வா தத்திற்கான தாரக மந்திரம் இதுதான். ஆம் அவள் எலியாவின் சொற்படி செய்தாள். அன்றைக்கு தேவ வாக்கு, அந்த வார்த்தை களுக்கு அவள் கீழ்ப்படிந்தாள். ஆசீர்வதிக்கப்பட்டாள்.

இன்றைக்கு நாம் எதற்கு கீழ்ப்படிய வேண்டும்? அன்றைக்கு அந்த விதவைக்கு தேவனுடைய வார்த்தை கையிலே இல்லை. இன்று பரிசுத்த ஆவியானவராலே கொடுக்கப்பட்ட தேவனுடைய வார்த்தைகளடங்கிய வேத புத்தகம் நம்மிடம் உண்டு. நாம் ஆசீர்வதிக்கப்பட அந்த வார்த்தைகளுக்கு நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும்.

ஆனால் அநேகர் தேவனுடைய வார்த்தையை ஓரமாக ஒதுக்கி வைத்து விட்டு மனிதனால் இயற்றப்படும் கோட்பாடுக ளுக்கும், உணர்வுகளுக்கும், கட்டுக்கதைகளுக்கும் செவி கொடுக்கின்றனர். ஆனால் இயேசு கிறிஸ்து தன் மலைப்பிரசங் கத்தில் நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவை களின்படி செய்கிறவன் எவனோ, அவனை கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்” என்று கூறியுள்ளார். (மத். 7:24).

இதை வாசிக்கும் அருமையான தேவனுடைய பிள்ளை களே, “சாறிபாத் ஊர் விதவை” நமக்கு எல்லா வகையிலும் சிறந்த முன்மாதிரியாய் இருக்கிறாள். உயிரிலும் மேலாக தேவனுடைய மனிதனைக் கருதுகிறாள். இஸ்ரவேலின் தேவன்மேல் அவ்வளவு அசைக்க முடியாத நம்பிக்கை வைக்கிறாள். நாமும் கூட அவளைப்போல் தேவன் சொற்படி செய்து குடும்பமாக ஆசீர்வா தத்தை வாழ்நாள் முழுவதும் அனுபவிப்போம். தேவனின் ஆசீர் வாதமானது விசேஷித்த ஒன்று. நம்முடைய கண்களுக்கு அது ஆச்சரியமாகத்தான் தோன்றும்.

விசேஷமாக குடும்பத்தின் முக்கிய பங்கை வகிக்கும் பெண் களாகிய நாம் முற்றிலும் அவருக்கு கீழ்ப்படிந்து அவர் சொல்படி செய்து, அளவில்லாத ஆசீர்வாதத்தை நமக்கும் நம் கணவருக் கும் நம் அருமைப் பிள்ளைகளுக்கும் பெற்றுத் தருவோம். அவ்வாறு செய்ய பிதாவாகிய தேவன் தம் குமாரன் மூலமாக நமக்கு முழு பெலனையும் விசுவாசத்தையும் கட்டளையிடுவா ராக!!.

ரேச்சல் ராஜநாயகம்

வாலிபர் பகுதி

# கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாயிருப்போம்

பிரியமான வாலிப நெஞ்சங்களே, உங்களை மறுபடியும் இந்தக் கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இந்த உலகத்திலே நாம் பார்க்கும்போது எல்லா வகையான பிரச்சனை களையும் நாம் பார்க்கிறோம். உதாரணமாக, பகை, போர், கொலைகள், கருக்கலைப்பு, பாலியில் பலாத்காரங்கள், சமுதாயப் பின்னணி, மதப் பின்னணி மற்றும் பதவிப் பின்னணியை அடிப்படையாக வைத்து பட்சபாதம் காட்டுதல், வியாபாரங்களில் ஏமாற்று, மோசடி, திருட்டுப் போன்ற காரியங்கள் இந்த உலகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது போன்ற காரியங்கள் நம்மை அதிகமாக துக்கப்படுத்துகின்றன. இவைகளின் முடிவைக்காண நாம் விரும்புகிறோம். ஒருவேளை நாம் இந்த உலகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கும் காரியங்களைப் போல நம் கிறிஸ்தவர்கள் மத்தியில் நடைபெறுவதில்லை என்று நினைக்கத் தோன்றும் ஆனால், இதைப்பற்றி நீங்கள் ஆழமாக சிந்தித்துப்பார்க்க வேண்டும் என்று உங்களை நான் உற்சாகப்படுத்துகிறேன். உலகம் முழுவதையும் நாம் பார்க்கும் போது கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையை பிரிவினை, மாயமாலம், கள்ள உபதேசங்கள், கிறிஸ்தவர்கள் உலகத்தாரைப் போன்று வாழ்க்கை நடத்துதல், பொய், ஏமாற்று, சபை காரியங்களில் ஈடுபாடின்மை போன்ற காரியங்கள் சீரழித்து வருகின்றன. மேலும் இன்றைய நாட்களில் அநேக கிறிஸ்தவர்கள் இல்லங்களில் வேத வாசிப்பும், ஜெபமும் கிடையாது. அதுமாத்திரமல்லாமல் கிறிஸ்தவர்கள் அனுதினமும் தங்கள் குழந்தைகளுக்கு வேதாகமத்தைப் போதிப்பதில்லை. இன்னும் அநேக கிறிஸ்தவர்கள் தேவனையும், அவருடைய ராஜ்யத்தையும் விட அதிகமாக உலகப் பொருள்களை நேசிப்பதும், தேவனுடைய ராஜ்யம் விரிவடைவதற்காக கொடுக்க வேண்டிய அளவிற்கு காணிக்கைகளைக் கொடுக்காமல் இருப்பதுமாய் இருக்கிறார்கள்.

கிறிஸ்தவர்கள் மத்தியில் நடைபெறும் இதுபோன்ற காரியங்கள் நம்மை அதிகமாக துக்கப்படுத்த வேண்டும். சபையிலே இதுபோன்ற காரியங்களை களைந்தெறிய நாம் பாடுபடவேண்டும். இதுபோன்ற பிரச்சனைகள் எல்லாம் உலகத்திலும், சபையிலும் ஏன் காணப்படுகின்றன? அநேகப் பிரச்சனைகள் ஜனங்கள் சரியாக சிந்திக்காமல் இருப்பதால் தான் ஏற்படுகின்றன. நாம் எப்படிப்பட்ட சிந்தையுடையவர்களாய் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரோ அப்படி சிந்தியாமல் இருப்பதால் அநேக பிரச்சனைகளை நாம் சந்திக்கிறோம்.

உலகத்தில் இருப்பவர்கள் மாம்சப்பிரகாரமாக சிந்திக்கிறார்கள். இன்றைய நாட்களில் அநேக விசுவாசிகள் உலகத்தில் உள்ளவர்களைப் போல் சிந்திக்கிறார்கள். அநேக கிறிஸ்தவர்கள் "எல்லோரும் இப்படித்தான் நினைக்கிறார்கள், சொல்கிறார்கள், செய்கிறார்கள்" என்றெல்லாம் பேசக்கேட்டிருக்கிறோம். பிரியமான வாலிப நெஞ்சங்களே! தேவன் நாம் இப்படித்தான் சிந்திக்க, பேச, செயல்பட வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரா? இந்தக் கேள்விகளுக்கு வேத வசனங்களின் துணை கொண்டு நான் பதிலளிக்க விரும்புகிறேன். ரோமர் 12:2ல் "நீங்கள் இப்பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" என்று நாம் வாசிக்கிறோம். அதாவது, தேவன் நாம் இந்த உலகத்தின் மக்களிலிருந்து வித்தியாச மாயிருக்க வேண்டும் என்று விரும்புகிறார். நாம் இந்த உலகத்திலிருந்து வித்தியாசமாயிருக்க வேண்டும் என்றால் நீங்களும், நானும் வித்தியாசமாயிருக்க வேண்டும். நாம் உயிர்வாழ தேவன் இந்த உலகத்தைத் தான் நமக்குத்தந்திருக்கிறார் ஆயினும் நாம் "கிறிஸ்தவர்கள்" என்ற தனித்தன்மையை இந்த உலகத்தில் பதிக்க வேண்டும். இது நாம் கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாய் இருந்தால் சாத்தியமாகும். பிலிப்பியர் 2:5ல் கிறிஸ்து இயேசுவி லிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது என்று வாசிக்கிறோம். இதன் அர்த்தம் என்னவென்றால் நாம் கிறிஸ்து வைப் போலவே சிந்திக்க வேண்டும், அவருடைய மனப்பான் மையைக் கொண்டிருக்க வேண்டும், அவருடைய உணர்வு களைக் கொண்டிருக்க வேண்டும், அவரைப் போலவே நோக்கம் உடையவர்களாய் இருக்க வேண்டும். இது தேவனிடத்திலிருந்து நமக்கான கட்டளையாயிருக்கிறது.

**கிறிஸ்துவின் சிந்தையை எப்படி வளர்த்துக்கொள்வது?**

முதலாவது கிறிஸ்துவைப்போல சிந்திக்க நமக்குத் தீவிரமான, உண்மையான ஆசை இருக்க வேண்டும், நம்முடைய மனதை நாம் அடக்க வேண்டும், அவருடைய வார்த்தைகளை நாம் படிக்க வேண்டும், தியானிக்க வேண்டும், நம் மனதை இயேசுவின் வார்த்தைகளால் நிரப்ப வேண்டும். சரி, அடுத்ததாக கிறிஸ்துவின் சிந்தையின் தன்மைகளைப் பார்ப்போம்.

**I தாழ்மை :**

அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப் பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார் (பிலிப்பியர் 2:6,7). நம்முடைய அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்து தாழ்மைக்கு சிறந்த முன்மாதிரியாக இருக்கிறார். பெருமையும், கர்வமும் பிடித்த இந்த உலகத்தில் ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமாகிய இயேசு

தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். நாமெல்லாரும் இயேசு கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்ற கட்டளைப்பெற்றிருக்கிறோம். இந்த பெருமையானது கர்த்தர் வெறுக்கும் காரியங்களில் ஒன்றாக இருக்கிறது. மனமேட்டிமையுள்ளவனெவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன் என்று நீதிமொழிகள் 16:5ல் நாம் வாசிக்கிறோம்.

வேதாகமத்தில் தேவனுக்கு விரோதமாக பெருமை பாராட்டியவர்கள் ஒன்றுமில்லாமல் போயிருக்கிறார்கள். பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மை உள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார் என்பதை நாம் நன்றாக உணர்ந்து செயல்படவேண்டும். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்திச் சென்ற மோசே ஒரு மகாபெரிய தலைவனாயிருந்தும் தன்னை முற்றிலுமாக தாழ்த்தினான் என்று பார்க்கிறோம். எண்ணாகமம் 12:3ல் மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான் என்று நாம் வாசிக்கிறோம். எனவே நாம் ஏற்ற காலத்திலே தேவன் நம்மை உயர்த்தும் படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருக்க வேண்டும்.

## II அன்பு :-

“அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்” (1யோவான் 4:8). அன்பான தேவனை பெற்றுக் கொண்டிருக்கிற நாம் அன்பிலே குறைவுள்ளவர்களாயிருக்கிறோம். முன்பு ஒரு காலத்தில் கிறிஸ்தவர்கள் அன்புக்கு பேர்போனவர்கள், நான் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறேன். ஆதிக் கிறிஸ்தவர்கள் தங்கள் நிலங்கள், உடைமைகளையெல்லாம் விற்று இல்லாதவர்களுக்கு கொடுத்து உதவிச் செய்தார்கள், எனவே, சகோதரர்கள் மத்தியில் சமத்துவம் ஏற்பட்டது. ஆனால், இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் மத்தியில் அன்புக்கு மிகப்பெரிய குறைச்சல் ஏற்பட்டுள்ளது. கிறிஸ்து எவ்வளவு அன்பும் மனதுருக்கமும் உடையவராக இருந்தார். எனவே, கிறிஸ்துவை பின்பற்றுகிறோம் என்று சொல்லிக் கொண்டு அன்பில்லாமல் இருந்தால் அப்படிச் செய்வது வீணான காரியமாகும். யோவான் 13:34,35 வசனங்களில் இயேசு “நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன் நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்”. நாம் மற்றவர்களிடம் அன்பு செலுத்துவதினால் கிறிஸ்துவின் நாமத்தை நிச்சயமாகவே மகிமைப்படுத்த முடியும். இந்த உலகமானது கிறிஸ்தவர்களிடமிருந்து அதிகமான காரியங்களை எதிர்பார்க்கிறது. ஏதோ ஒரு தவறான காரியத்தை கிறிஸ்தவர்கள் செய்துவிட்டால் இவர்களா

இப்படிச் செய்தார்கள் என்று ஆச்சரியத்தோடு கேட்பதுண்டு. ஏனென்றால், கிறிஸ்துவைப்பற்றியும், கிறிஸ்துவின் போதனை களைப்பற்றியும் உலகத்தாருக்குக்கூட ஓரளவு தெரியும் எனவே தான் நம்மிடமிருந்து நற்குணங்களை அவர்கள் அதிகமாக எதிர்பார்ப்பார்கள் எனவே தான் கிறிஸ்தவர்களாகிய நாம் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் நாம் கிறிஸ்து வின் சீஷர்களென்று இந்த உலகம் அறிந்து கொள்ளும் அதினால் தேவனுடைய நாமம் மகிமைப்படும். ஆவியின் கனியைக் கொடுக்க கிறிஸ்தவர்களாகிய நாம் கடமைப்பட்டிருக்கிறோம் ஆவியின் கனியில் அன்புதான் முதலிடத்தைப்பிடிக்கிறது. அன்பானது, எல்லா நற்காரியங் களுக்கும் ஊற்றும், உறைவிட முமாயிருக்கிறது. நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும் போது மற்றவர்களுடைய தப்பிதங்களை நாம் மன்னிக்கும் குணா திசயத்தை உடையவர்களாய் காணப்படுவோம். இது தேவன் நம்முடைய தப்பிதங்களை மன்னிக்க வகைச் செய்யும், அது மாத்திரமல்ல, நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும் போது நிச்சயமாகவே நாம் தேவனிடத்தில் அன்பு கூருவோம் அப்போது அவருடைய கற்பனைகளையும் கைக்கொள்ளுவோம். தேவன் நாம் இந்த உலகத்தாரை விட வித்தியாசமாயிருக்க வேண்டும் என்று நம்மை எதிர்பார்க்கிறார். எனவே, உலகத்திலும், சபை யிலும் ஏற்படும் பிரச்சனைகளைத் தவிர்க்க நாம் கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாய் காணப்படுவோம், கிறிஸ்தவர் களாய் இருந்து உலகத்திலே ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவோம், தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துவோம் கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென்!.

*பென்னி மார்ட்டின்*

## மலைப்பிரசங்கம் - யாக்கோபு நிருபம் - ஒப்புமை

| | | | |
|---|---|---|---|
| 1. | கேளுங்கள் (மத். 7:7) | - | கேளுங்கள் (யாத். 1:5) |
| 2. | நல்ல ஈவு (மத். 7:11) | - | நன்மையான ஈவு (1:17) |
| 3. | செயல் (7:24) | - | செயல் (1:22) |
| 4. | பரஸ்பர எதிர்பார்ப்பு (7:12) | - | பரஸ்பர எதிர்பார்ப்பு (2:8) |
| 5. | கனி கொடுப்பது (7:16) | - | கனி கொடுப்பது (3:12) |
| 6. | சமாதானம் (5:9) | - | சமாதானம் (3:18) |

சிறுவர் பகுதி

# பருந்து மற்றும் கழுகினிடமிருந்து சில பாடங்கள் (LESSONS FROM THE RAPTORS)



எனக்குப் பிரியமான சிறு தம்பி தங்கைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். மாதந்தோறும் உங்களை இந்த சிறுவர் பகுதி யின் மூலமாக சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இந்த சிறுவயதில் தேவனுடைய சிருஷ்டியின் மகத்துவத்தை யும், அந்த சிருஷ்டிகளாகிய பறவைகளோ, மிருகங்களோ தன் தன்மையினாலும், சிறப் பான சில குணாதிசயகளினா லும் கொடுக்கும் சில பாடங்க ளையும் கற்றுக்கொள்வதும் ஒரு ஆசீர்வாதம் தான்! ஆம், இந்த மாதம் நாம் பருந்து மற்றும் கழுகுகினிடமிருந்து பாடம் கற்றுக்கொள்ளப்போகிறோம்.

நான் மேற்சொன்ன இந்த இரண்டு பறவைகளும் "இறைச்சி தேடும் பறவைகள்" ஆகும். தேவனுடைய அற்புதமான படைப்பு களில் இவையும் ஒன்று. சாலமோனின் நீதி 30:19 ல் "ஆகாயத்தில் கழுகின் வழி" மிகவும் வியக்கத்தக்கது என்று கூறுகிறார். தேவன் அவைகளுக்கு பலமான உடல் அமைப்பையும் சக்திவாய்ந்த இறக்கைகளையும் கொடுத்திருக்கிறார். அவைகள் பறக்கும் போது காற்றை கிழித்து சீறி மேல் நோக்கி பறக்கின்றன. நாம் அவைகள் பறப்பதை பார்க்கும்போது அது சுலபமாக தெரியும். ஆனால் தேவன் கொடுத்த உடலமைப்பை வைத்து அவைகள் சிரத்தை எடுத்துதான் பறக்கின்றன. மிக உயரத்தில் பறப்பதற்கு ஏதுவான இறக்கைகளை அதன் சிருஷ்டிகர் (தேவன்) அவைக ளுக்கு கொடுத்திருக்கிறார்.

அவைகள் வேதாகமத்தின் சில இடங்களில் பாடங்களை நமக்கு கற்றுக்கொடுக்க தேவனாலே பயன்படுத்தபட்டுள்ளன. அவைகளின் இறக்கைகளைப் பற்றி தேவன் எவ்வாறாக புகழ்ந்து பேசுகிறார் பாருங்கள். யாத் 19:4ல், தேவன் இஸ்ரவேலரை எகிப்தியரின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்ததை குறித்து பேசும் போது "நான் உங்களை கழுகுகளுடைய செட்டைகளின் மேல் சுமந்து பாதுகாத்தேன்" என்று கூறுகிறார்.

உபா:32:11 ல் "கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சு களின்மேல் அசைவாடி தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளைத் தன் செட்டைகளின்மேல் சுமந்து கொண்டு போகிறது போல" என்று கூறுகிறார்.

பருந்துகளுக்கும் கழுகுக்கும் தேவன் கூர்மையான பற்களையும், பாதங்களையும் (நகம்) கொடுத்துள்ளார். இவைகள் எதற்கு தெரியுமா? வேகமாக பறந்து சென்று தனது இரையை நழுவாமல் பிடித்து அதை தூரமாக எடுத்துச் செல்வ தற்கு. அதைபற்றி தான் தேவன் உபா:28:49-50 ல் சொல்கிறார் பாருங்கள்! "கர்த்தர் உன் மேல் கழுகு பறக்கும் வேகமாய் எதிரி களை வரப்பண்ணுவார்" என்று எச்சரிக்கை கொடுத்தார்.

எரேமியாவின் மூலம் இஸ்ரவேலருக்கு அவர் சொல்லும் பொழுது "நீ கழுகைப் போல் உயரத்தில் உன் கூட்டைக் கட்டி னாலும் அங்கேயிருந்து உன்னை விழப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்கிறார்" என்று ஏரே:49:16ல் ஓசியா 8:1 ல் அதே விதமான எச்சரிக்கை கொடுக்கிறார்.

பாருங்கள்! இஸ்ரலேலரை கழுகுகளின் செட்டைகளின் மேல் சுமந்து பாதுகாத்தேன் என்று சொல்கிறார். ஆனால் அதே சமயம் எதிரிகளை கழுகு பறக்கும் வேகமாய் வரப்பண்ணுவேன் என்று எச்சரிக்கிறார்.

தேவன் தான் சிருஷ்டிகர் என்றும் எல்லாம் அவருடைய கட்டுப்பாட்டின் கீழ் அதாவது, அவருடைய தீர்மானத்தின்படியே நடக்கின்றன என்பதையும் நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

அவருக்குப் பயந்து நடக்கும்பொழுதும், நாம் சோர்ந்து போகும் நேரங்களிலும் தேவன் என்ன சொல்கிறார் பாருங்கள்! ஏசா:40:31 ல் "கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போல செட்டைகளை அடித்து எழும்பு வார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள். நடந்தா லும் சோர்ந்து போகார்கள்" என்று கூறுகிறார்.

ஆக, தேவனுக்குப் பிரியமான பிள்ளைகளே, பாருங்கள் பருந்துகளும் கழுகுகளும் நம்முடைய தேவனின் தன்மையை எடுத்துரைக்கிற சிருஷ்டிகளாக இருக்கின்றன. நாம் பிரியமாக நடந்தால் பாதுகாக்கவும் நம் தேவனுக்கு தெரியும். அதே சமயத் தில் அவருக்கு பிரியமில்லாமல் நடந்தோமென்றால் நம்மை தண்டிக்கவும் அவருக்குத் தெரியும்.

ஆகையால், இந்த சிறுபிராயத்திலிருந்தே நாம் தேவனுக்கு பிரியமானவர்களாக இருக்கவேண்டும். நீங்களும் கழுகுகளைப் போல செட்டையை விரித்து உயர பறக்க வேண்டும் தானே? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

உங்களின் இந்த கல்வியாண்டு வெற்றியுள்ளதாயும் ஆசீர்வாதம் நிறைந்ததாயும் அமைய நாங்கள் ஜெபிக்கிறோம்.

**R. Abel R. Nayagam.**

# பெரோயரும், தெசலோனிக்கேயரும்

பவுலும், சீலாவும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பெரோயாவில் பிரசங்கித்த போது அங்கே இருந்த யூதர்கள் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படி இருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்த பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணவாசிகளாயிருந்தார்கள் (அப் 17:11).

இதன் பொருள் தெசலோனிக்கேயில் யாருமே சுவிசேஷத்தை கேட்டு அதை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லையா? பெரேயாவில் அநேக யூதர்கள் கிறிஸ்துவைப் பற்றிய பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களை கவனித்து அவைகளை ஆராய்ந்து பார்க்க மனமுவந்தார்கள். அந்த தீர்க்கதரிசனங்கள் எல்லாம் இயேசுவின் ஜீவியத்தில் நிறைவேறியதை அவர்களால் காணமுடிந்தது, அது மாத்திரமல்ல இயேசு மெய்யாகவே கிறிஸ்து என்பதையும் அவர்களால் காணமுடிந்தது. அந்தப் பட்டணத்தில் பவுலும், சீலாவும் புறஜாதிகளுக்கும் பிரசங்கித்தார்கள். அநேக யூதர்களும், அநேக கிரேக்கர்களும் விசுவாசித்தார்கள் (அப். 17:12). சுவிசேஷத்தினால் அவர்கள் சகோதரர்களானார்கள் (அப்.17:14).

ஆனால் தெசலோனிக்கேயில் சம்பவம் நேர்மாறாக நடைபெற்று. சில யூதர்களும், திரளான புறஜாதியாரும் அங்கே சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்தார்கள். புறஜாதிகள் கிறிஸ்துவையும், அருவடைய சுவிசேஷத்தையும் ஒன்றுமில்லாத மதச்சடங்காச்சாரங்களோடு ஒப்பிட்டுப்பார்த்த போது அவர்கள் மிகுந்த உபத்திரவத்திலே பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திருவசனத்தை ஏற்றுக்கொண்டு கர்த்தரைப் பின்பற்றினார்கள் (1தெச 1:6). மிகுந்த உபத்திரவத்தின் மத்தியிலும் அவர்களுடைய கீழ்ப்படிதலும், உண்மைத்தன்மையும் மற்ற விசுவாசிகளுக்கும் சிறந்த முன்மாதிரியாக இருந்தது, அவர்களிடமிருந்து கர்த்தருடைய வசனம் மிகவும் வல்லமையாக புறப்பட்டு வந்தது. அந்த பகுதி முழுவதும் இருந்த ஜனங்கள் தெசலோனிக்கேயரைப் பற்றி இப்படியாக பேசினார்கள் ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு விக்கிரகங்களை விட்டுத் தேவனிடத்திற்கு மனந்திரும்பி, அவர் மரித்தோரிலிருந்தெழுப்பின வரும், இனி வரும் கோபாக்கினையினின்று நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை எதிர்பார்த்து கொண்டிருப்பவர்கள் (1தெசலோ 1:9,10).

எனவே, தெசலோனிக்கேயில் சில யூதர்களும், அநேக புறஜாதிகளும் சுவிசேஷத்தை ஜாக்கிரதையாக ஆராய்ந்தார்கள். அவர்கள் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்ததினால் தங்களுடைய மாபெரும் தைரியத்தையும், விசுவாசத்தையும் காட்டி கிறிஸ்துவுக்குள் ஒன்றானார்கள்! (கலாத்தியர் 3:26-29; எபேசியர்

2:11-18). ஆயினும் அவர்கள் எல்லா போதனைகளையும் ஜாக்கிரதையாய் படிக்க அவர்களை ஞாபகப்படுத்த வேண்டியதாயிருந்தது. தெசலோனிக்கேயில் இருந்த கிறிஸ்தவர்களுக்கான தன்னுடைய முதல் நிருபத்தில் பவுல் எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள் என்று அவர்களை வலியுறுத்தினார் (1தெச 5:21).

இன்றைய நாட்களில், அநேக தேசங்களிலிருந்து திரளான ஜனங்கள் கிறிஸ்துவினிடத்திற்கு திரும்பி அவருக்குள் ஒன்றாயிருப்பது மாபெரும் சந்தோஷமான காரியம்! ஆயினும் நாமும் கூட எப்போதும் விழிப்பாயிருக்க வேண்டும். நாம், போதிக்கப்படுகிற எல்லா போதனைகளும் உண்மைதானா என்பதை கண்டறிய தேவனுடைய வார்த்தையை ஆராய்வதினால் சோதித்துப்பார்க்க வேண்டும். மனுஷருடைய போதனைகள் கிறிஸ்துவை விட்டம், நித்திய ஜீவனை விட்டும் நம்மை இழுத்துச் செல்ல நாம் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது (1கொரி 10:12; 9:27; எபிரெயர் 2:1-4; 3:12-14).

**Royce Frederick** **Benny Martin**

# கோபம் என்கிற அமிலம்

"...நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ் செய்யாதிருங்கள்..." எபே 4:26

கோபம் என்பது படுகிற இடத்தையெல்லாம் தின்று போடுகிற அல்லது அரித்துப்போடுகிற அமிலத்தைப் போன்றது. இது மனித சுபாவத்துக்குள் கட்டப்பட்டிருக்கிற பிரச்சனையாக இருக்கிறது. இது சாத்தானுடைய ஆயுதக்கிடங்கில் மிகவும் அபாயகரமான ஆயுதங்களுள் ஒன்றாக இருக்கிறது. கோபமானது கட்டுப்படுத்தப்படாத பட்சத்தில், அது ஜனங்களை உணர்வின் அடிப்படையிலும், ஆவிக்குரிய பிரகாரமாகவும் மிகவும் சேதப்படுத்திவிடும்.

ஆயினும், எல்லா கோபமும் மோசமானதல்ல. நாம் கோபத்தை நல்ல வழியிலும் பயன்படுத்தலாம், தவறான வழியிலும் பயன்படுத்தலாம். ஒருமுறை இயேசு ஒரு மனிதனை குணப்படுத்தியபோது, பரிசேயர்கள் அந்த அற்புதம் சம்பந்தமாக நடந்து கொண்ட விதத்தைப்பார்த்து இயேசு கோபப்பட்டார் (மாற்கு 3:5). அநேகமுறை நம்முடைய இரட்சகர் மற்றவர்கள் தவறாக நடத்தப்பட்டபோது, துன்புறுத்தப்பட்டபோது, உதாசினப்படுத்தப்பட்ட போது கோபமடைந்திருக்கிறார்.

சில காரியங்கள் நம்மை கோபப்படுத்த வேண்டும் அவைகளாவன: பாலியல் மோசடி குழந்தைகள் தவறாகப் பயன்படுத்துதல், சட்டவிரோதமான போதைப் பொருள்கள் வியாபாரம், ஏழை

களை ஒடுக்குதல் போன்றவைகளாகும். நாம் கோபங் கொண்டாலும், பாவஞ் செய்யாதிருப்பதற்கான வழி பாவத்தின் மீது மாத்திரம் கோபப்படுவதாகும். அதாவது பாவிகளை நேசிக்க வேண்டும் ஆனால் பாவத்தை வெறுக்க வேண்டும். ஏனென்றால், சில வேளைகளில் கோபம் அன்பின் சிறந்த வெளிப்பாடாயிருக்கிறது.

ஆயினும், கட்டுப்படத்தப்படாத, தேவபக்தியற்ற கோபம் ஒன்று இருக்கிறது. உங்கள் கோபம் பாவமான கோபமா என்பதை நீங்கள் எப்படி தீர்மானிப்பீர்கள்? நீங்கள் கோபப்படுவதற்கு போதுமான காரணம் இருக்கிறதா என்பதை விவரமாக ஆராய்ந்து தீர்மானம் எடுங்கள்.

இயேசு காரணமின்றி தன் சகோதரனிடத்தில் கோபப்படும் ஒருவர் பற்றி பேசியிருக்கிறார். நீதியுள்ள காரணத்திற்காக அல்லாமல் வேறு காரணங்களுக்காக கோபப்பட்டால் அது பாவமாகும். குற்றத்தின் மீது கோபப்படாமல் அந்த நபர் மீது கோபப்படுவது பாவமாகும். உங்கள் கோபம் பழி வாங்கத் தூண்டினால் அது பாவமாகும். நாம் கோபத்தை அப்படியே மனதில் வைத்து பிறரை மன்னிக்காமல் இருந்தால் அது அநீதியாகும்.

சாலொமோன் ஞானி இப்படியாகச் சொன்னார் "உன் மனதில் சீக்கிரமாய்க் கோபங் கொள்ளாதே; மூடரின் நெஞ்சிலே கோபம் குடிகொள்ளும்" (பிரசங்கி 7:9). மேலும் அவர் சொல்லும் போது "தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிழந்த பாழான பட்டணம் போலிருக்கிறான்" என்று சொல்கிறார் (நீதிமொழிகள் 25:28).

அநேக மக்களிடத்தில் உக்கிரகோபம் காணப்படுகிறது. அடிக்கடி சின்ன சின்ன விஷயங்கள் கூட பெரிதாக வெடித்து விடுகிறது. நாம் கோபப்படும் போது சாத்தான் நம்மீது தாக்குதலை நடத்த வாசலைத் திறந்து கொடுக்கிறோம். நீங்கள் கோபங் கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள் என்று பவுல் சொன்ன உடனே, "பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்" என்று சேர்த்து கூறியிருக்கிறார் (எபேசியர் 4:26,27). நாம் கோபத்தில் இருக்கும் போது பிசாசுக்கு எளிதாக இரையாகி விடுகிறோம்.

எப்படி அமிலம் தான் வைக்கப்பட்ட பாத்திரத்தை அழித்துப்போடுகிறதோ அதைப்போல கோபமும் தன்னால் வைக்கப்பட்ட மனதை அழித்துப் போடுகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். நாம் பலவீனமானவர்கள், இந்த பிரச்சனையை மேற்கொள்ள இயேசுவை சார்ந்திருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

**Clarence Deloach** **Benny Martin**

# நீங்கள் விசுவாசமுள்ளவர்களோ?

கிறிஸ்துவுக்குள் அன்பான திருமறை ஆசான் வாசகர்க ளுக்கு வாழ்த்துக்கள். பள்ளியில் படிக்கும் பிள்ளைகள் பரீட்சை யின் மூலம் சோதிக்கப்படுவது போல, நம்முடையக் கிறிஸ்தவ வாழ்க்கையும் பரிசோதனைக்குரியது என்பதை பவுல் அப்போஸ் தலன் 2 கொரி 13:5 ல் "நீங்கள் விசுவாசமுள்ளவர்களோ என்று உங்களை நீங்களே சோதித்துப் பாருங்கள்" என்றும் அதற்கு ஒருவர் பரீட்சையில் பங்குபெற வேண்டியது அவசியம் என்றும் சொல்லுகின்றார். சபைக் கூடி வருதலை சரிவரக் கடைபிடிக்கா தவர்கள் மட்டுமல்ல ஒழுங்காக சபைக்கு வருபவரும் சிந்திக்க வேண்டிய இக்கேள்விக்கு யாக்கோபு நிருபத்திலிருந்து நாம் விடை காணப் போகின்றோம்!

ஆதிகிறிஸ்தவர்களுக்கான யாக்கோபு நிருபம் ஒருவரது தனிப்பட்ட விசுவாசத்திற்கான தன்மை பற்றி அழகாகப் படம் பிடித் துக் காண்பிக்கின்றது. அதன் அடிப்படையில் சில கேள்விகள் மூலம் நம்மில் விசுவாசமுள்ளதா? என்பதை சற்று ஆராய்ந்து பார்க்கலாம்.

**1. என்னுடைய விசுவாசத்தின் பரீட்சையில் சோர்ந்து போகிறேனா? (யாக் 1:2-4)**

நமக்கு பலவித சோதனைகள் வரும்போது நம் விசுவாசத் திற்கு அது பரீட்சையாக அமைகிறது. இவ்வுலகத்தின் பக்தி கண்களின் மூலமாக பார்த்து வர முயற்சிக்கிறது. ஆனால் ஒரு கிறிஸ்தவனின் விசுவாசம் காணாததை நம்புவதில் அமைகிறது என்பதை நாம் மறக்கக் கூடாது. மேலும் மற்றவரைப் பார்த்து விசுவாசத்தில் பெலப் பட நாம் சபை கூடி வருகிறோம். ஒரு வேளை மற்றவர் அசட்டை பண்ணினாலும் நாம் சோர்ந்து போகாமல் நம் விசுவாசத்தை துவக்கி அதை நல்லபடியாக முடித்து வைக்கக்கூடிய நமது ஆண்டவர் இயேசு வையே நோக்கி பொறுமையோடே ஓடக்கடவோம். (எபி. 12:1)

**2. நான் வசனத்தின்படி நடந்து கொள்கிறேனா?**

திருவசனத்தை கேட்கிறவர்களால் மாத்திரமல்ல அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள் (யாக் 1:22). இன்றைய நாட்களில் ஆயிரக்கணக்கான சபை பிரிவுகள் இருப்பதற்கு காரணம் அவர்கள் வசனத்தின் படி நடவாததே காரணம். ஒருவன் வசனத்தின்படி நடக்க மனதாயிருந்தால் கிறிஸ்துவின் சபை மாத்திரமே சரியான உபதே சத்திலிருப்பதை அறிந்து கொள்வான். சபையிலிருக்கும் நாமும் கிறிஸ்துவின் உபதேசப்படி சாந்தத்தோடும், மனத் தாழ்மையோடும் வாழ முயற்சிக்காத போது மணல் மீது தன் வீட்டைக் கட்டின புத்தி யில்லாத மனுஷராய் இருப்போம். மனுஷருடைய கோபம் தேவ நீதி யை நடப்பிக்க மாட்டாது. (யாக் 1:20)

**3. என்னில் ஏழை, பணக்காரர் என்ற பட்சபாதமுண்டா?**

என் சகோதரரே இயேசுக் கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத் தை பட்ச பாதத்தோடே பற்றிக் கொள்ளாதிருங்கள். (யாக் 2:1) மற்ற வர்களை நாம் உள்ளன்போடு மதிக்க பொருளாதாரம் தடையாக இருக்கக்கூடாது. அது பாவம் என்று யாக்கோபு (2:9) எச்சரிக்கின் றார். ஒருவேளை நம்மில் அந்த காரியம் காணப்படுமானால் நாம் எச்சரிக்கையடைந்து ஒருவரது விசுவாசத்திற்கேற்ற பண்புகளுக்கா வே நாம் அவர்களை மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில், நாம் தொழுது கொள்ளும் தேவன் பட்சபாத மற்றவர் என்பதை நினைவில் வையுங்கள் (1 பேது 1:17).

**4. விசுவாசத்தின்படியான செயல்கள் என்னில் காணப்படுகிறதா?**

பொருளாதாரத்தில் நாம் எந்த நிலைமையிலிருந்தாலும் நம்மால் இயன்ற பொருளுதவிகளை மற்றவருக்கு செய்கிறோமா?

அல்லது கர்த்தர் எனக்கே கொடுத்தார் என்று சுயநலமாக வாழ்கி றோமா? நாம் மற்றவரைக் குறை சொல்வதைவிட்டு நம் கிரியை களைத்தான் சோதித்துப் பார்க்க வேண்டும் (கலாத் 6:3-5) சிலர் தங்கள் வருமானங்களை பாலிசி, நிலங்கள், நகைகள் போன்றவற்றில் முடக்கிவிட்டு உதவி செய்ய முடியவில்லையே என்று போலி நாடகம் ஆடுகிறார்கள். ஆனால் அப்படிபட்டவர்களை பார்த்து இயேசு உங்க ளுக்கு உள்ளவைகளை விற்று பிச்சைக் கொடுங்கள் என்று போதிக் கின்றார். (லூக் 11:41 12:33) அப்படிப்பட்ட கிரியைகள் நம்மில் இல்லாத பட்சத்தில் நம்முடைய விசுவாசம் செத்ததாயிருக்கிறது. (யாக் 2:14-20)

**5. என்னில் நாவடக்கம் இல்லையா?**

நம்மில் பலர் தம் மனதில் தோன்றுவதையெல்லாம் பேசி விட்டு நான் வெளிப்படையாக பேசுபவன் என்று பெருமைப் பட்டுக் கொள் வார்கள். அது முட்டாள்தனமானது, அறிவாளி தன் வார்த்தைகளை அடக்குகிறான் என்று ஞானி சொல்கிறார் (நீதி 17:27) மேலும், சொன்ன சொல்லின்படி நடவாவிட்டால் அவன் மனுஷனே அல்ல என்று யாக்கோபு சுட்டிக்காட்டுகின்றார் (யாக் 3:2) விசேஷமாக மற்ற வரை அவமானப்படுத்தும்படியான வார்த்தைகள் நம் வாயில் வரக் கூடாது என்றும் தற்பெருமை, பொய் பேசுதல் போன்ற யாவும் ஞான மற்றது (யாக்கோபு 3:13-15).

**6. என்னில் கசப்பான வைராக்கியம் காணப்படுகிறதா?**

அநேகர் சர்வசாதாரணமாக நான் அவரோடு பேசுவதில்லை என்று சொல்லிக்கொள்கிறார்கள். ஆனால் அது மிகவும் தவறு! சபை யிலோ, குடும்ப அங்கத்தினர்களோ யாராயிருந்தாலும் நாம் அனைவ ரோடும் சமாதானமாயிருக்க பார்க்க வேண்டும். யாக்கோபு இந்த குணத்தை ஞானமற்றது விவேகமற்றது என்று சாடுகிறார் (யாக் 3:13-17) கிறிஸ்துவிடம் நாம் கற்கவேண்டிய சாந்தமும் மனத்தாழ் மையும் மற்றவரிடம் பயிற்சியில் காட்ட வேண்டும். நாம் மனந் திரும்பி பிள்ளைகளை போல் ஆகாவிட்டால் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க முடியாது என்று ஆண்டவர் தெளிவாகக் கூறுகிறார். நமக்குப் பிடிக்காத விஷயங்கள் மற்றவரிடம் காணப்பட்டாலும் சகோதர சிநேகத்தில் நிலைத்திருப்பது நம் கடமையாகும். ஆவிக் குரிய விஷயத்தில் உபதேச விஷயத்தில் மட்டுமே நாம் கண்டிப்பான வைராக்கியமுள்ளவர்களாயிருக்க வேண்டும் (2 யோவான் 9-11).

**7. எல்லாவற்றிலும் நான் தேவனை சார்ந்து இருக்கிறேனா?**

சிலர் எதிர்கால பயத்தில் தற்போது லஞ்சம் வாங்குதல், வஞ்சித் தல், உதவி செய்யாமல் சுயநலமாய் வாழ்வது போன்ற பாவத்தில் ஈடுபடுகிறார்கள். நாளைய தினத்தைக் குறித்து கவலைக்கூடாது என்று ஆண்டவரும் கூறியிருக்கிறார். மாறாக, யாக்கோபு நாளைய தினத்தைப்பற்றி பெருமை பாராட்டாதே என்று ஆலோசனை வழங்கி யிருக்கிறார் (யாக். 4:14-17) நம் வருமானத்தை முடிந்த அளவு நம் தேவைகளைச் சந்திக்கவே தேவன் கொடுக்கிறார்-அதில் சேமித்து வைக்கிறேன் என்று சொல்லி கஷ்டப்படுவது மனுஷ ஞானம்-நாம் கர்த்தர் மேல் நம் பாரத்தை வைத்து இயன்ற அளவு முழுமையாக கிறிஸ்துவின் உபதேசங்களை நம் வாழ்வில் செயல்படுத்தி வாழும் போது உங்கள் பொக்கிஷங்கள் பரலோகத்தில் சேர்த்து வைக்கப்படு கிறது என்று ஆண்டவர் ஆறுதல் அளிக்கிறார் - பூமியிலும் நம் தேவைகள் நிச்சயம் சந்திக்கப்படும் (மத் 6:30-33).

ஆகவே, தேவனுடைய பிள்ளைகளே நம்மில் விசுவாசம் உள்ளதோ என்று நம்மை நாமே சோதித்துப் பார்த்து தேவனுக்கு பிரிய மான வாழ்க்கை வாழ தீர்மானம் எடுப்போம்.

பரலோகத்தின் தேவன் நம்மை ஆசீர்வதிப்பார்.

**சகோ. K. பாண்டியன்,** பாண்டிச்சேரி.

# இரத்த சாட்சிகள்

தொடர் கட்டுரை

## பாடம் - 4. முதல் சுவிசேஷப் பிரயாணத்தின் போது ஏற்பட்ட தடைகள்

### I. விசுவாசத்திற்கு எதிர்த்து நிற்கும் சாத்தானின் தடை!

அப்போஸ்தலனாகிய பவுல் தனது முதல் சுவிசேஷப் பயணத்தை அந்தியோகியா (சீரிய நாட்டிலுள்ள) விலிருந்து செலுக்கியா துறைமுகத்தில் கப்பல் ஏறி கடல் மார்க்கமாகச் சென்றார். அவரோடு பர்னபாவும்,மாற்குவும் உடன் சென்றனர் அவர்கள் சீப்புரு தீவு, சாலமிபட்டணம், பாப்போ பட்டணம் என்று அவர்களுடைய பயணம் நீண்டு கொண்டு அப் 13,14 அதிகாரங்கள் வரை சொல்லப்பட்டுள்ளது. அநேகர் யூதரும், யூத மார்க்கத்தை தழுவியவர்களும், பக்தியுள்ள புறஜாதியினரும் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து பவுலையும், பர்னபாவையும் பின் பற்றினார்கள் (அப். 13:43).

ஜனங்கள் கர்த்தரிடத்தில் அதிகதிமாய் சேர்க்கப்படுவதை சாத்தானால் பொருக்க முடியாமல் அவர்களுக்கு சில தடைகளை ஏற்படுத்தினான் அதில் முதல் தடை விசுவாசத்திற்கு எதிர்த்து நிற்கும் தடை. அதாவது சுவிசேஷத்திற்கு எதிர்த்து நிற்கும் தடை முதல் நூற்றாண்டில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அப்போஸ்தலர் கள் பிரசங்கித்த பொழுது சாத்தான் அன்றைய நாளில் உலகத் தை ஆட்சி செய்த ரோம அரசாங்கத்தின் மூலமாகத் தடைகளை ஏற்படுத்தினான். அப்போஸ்தலர்கள் அந்தத் தடைகளை முறிய டித்து தைரியமாக சுவிசேஷத்தைப் பிரசங்கித்து இரத்த சாட்சி களாக மரித்தனர்!. அதுபோலவே பவுலும், பர்னபாவும் முதல் சுவிசேஷ பயணத்தின் போது பாப்போ பட்டணத்தில் சுவிசேஷத் தைப் பிரசங்கித்த போது செர்கியு பவுல் என்ற விவேகமுள்ள அதிபதி சுவிசேஷத்தைக் குறித்த காரியத்தில் விசுவாசமுள்ள வனாகக் காணப்பட்டு அதற்குக் கீழ்படிய மிகவும் ஆசையா யிருந்தான். ஆனால், அந்த அதிபதியுடன் இருந்த பர்யேசு என்பவன் மாயவித்தைக்காரனும், கள்ளத்தீர்க்கதரிசியுமான யூதன் அதிபதியின் விசுவாசத்திற்கு இடையூறாக இருந்தான். அதிபதி யின் விசுவாசத்தினின்று திருப்ப வகை தேடி பவுலையும், பர்னபா வையும் எதிர்த்து நின்றான்! பவுல் பரிசுத்த ஆவியினாலே நிறைந் தவனாய் அவனை உற்றுப்பார்த்து எல்லா கபடமும், எல்லா பொல்லாப்பும் நிறைந்தவனே பிசாசின் மகனே, நீதிக்கெல்லாம் பகைஞனே கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டு வதில் ஓயமாட்டாயோ? இதோ இப்பொழுதே கர்த்தருடைய கை உன்மேல் வந்திருக்கிறது சில காலம் சூரியனைக் காணாமல் நீ குருடனாய் இருப்பாய் என்றான் உடனே அவன் கண் பார்வையை இழந்து கர்த்தருடைய சாபத்திற்குட்பட்டான் (அப். 13:6-11).

இந்த சம்பவத்தில் சாத்தானின் தடையானது கள்ளத் தீர்க்க தரிசியின் மூலமாக ஏற்பட்டது. இன்றைக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கள்ளப்போதகர்கள் தடையாக இருக்கின்றார் கள். சாத்தான் இவர்கள் மூலமாக செயல்பட்டு வருகிறான்!. அது எப்படியென்றால், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சுவிசேஷக் கட்டளையைக் கொடுத்து விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் விசுவாசியாதவனோ ஆக்கி னைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்றார் (மாற்கு 16:15,16) இந்த வசனத்தை மாற்றி விசுவாசமுள்ளவனாகி இரட்சிக்கப்பட்ட வன் ஞானஸ்நானம் பெறுவான் என்று போதிக்கின்ற யாவருமே கள்ளப் போதகராக இருக்கிறார்கள். மேலும் சிறு குழந்தை களுக்கு ஞானஸ்நானம் முதலில் கொடுத்து பின்பு விசுவாசத்தில் வளர்ந்து இரட்சிப்பை உறுதிப்படுத்தும் வகையில் திடப்படுத் தலைச் செய்கிறவர்களும் கள்ளப் போதகர்களே! இப்படிப்பட்ட வர்கள் அனைவரும் விசுவாசத்திற்கு எதிர்த்து நிற்கும் தடை களாக இருக்கிறார்கள்.

பவுலையும், பர்னபாவையும் எதிர்த்த கள்ளத்தீர்க்கதரிசி கர்த்தருடைய கோபத்திற்கு ஆளானதைக் கண்ட அதிபதி செர் கியு பவுல் கர்த்தருடைய உபதேசத்தைக் குறித்து அதிசயப்பட்டு விசுவாசித்தான் - அதாவது சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்தான். (அப்.13:12) இதை வாசிக்கின்ற நீங்கள் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் என்ற உபதேசம் தவறு என்றும் ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்படுதல் தான் கிறிஸ்துவின் உபதேசம் என்ப தை அதிசயப்பட்டு அதற்கு கீழ்படிய விரும்புகிறீர்களா? சாத்தா னின் தடைகளை முறியடியுங்கள்!.

## 2. சகோதரருக்கு விரோதமாகப் பகை உண்டாக்கும் தடை!

சுவிசேஷத்திற்கு சாத்தான் உண்டாக்கும் இரண்டாவது தடை சகோதரருக்கு விரோதமாகப் பகை உண்டாக்கும் தடை! பவுலும் அவரோடிருந்தவர்களும் முதல் சுவிசேஷப் பயணத்தின் போது இக்கோனியா பட்டணத்திற்கு வந்தார்கள். அங்கே பவுலும், பர்னபாவும் யூதருடைய ஜெப ஆலயத்தில் பிரவேசித்து யூதரிலும், கிரேக்கரிலும் திரளான ஜனங்கள் விசுவாசிக்கத்தக்க தாகப் பிரசங்கித்தார்கள். (அப் 14:1) அப்பொழுது விசுவாசி யாத யூதர்கள் சகோதரருக்கு விரோதமாகப் புறஜாதியாருடைய மனதை எழுப்பிவிட்டு பகை உண்டாக்கினார்கள். (அப். 14:2). இங்கே நாம் கவனிக்க வேண்டியது சாத்தான் தந்திரமாக தனது வேலையைச் செய்வதை கவனிக்க முடியும். அதாவது சாத்தான் நேரடியாக பவுலுக்கும், பர்னபாவுக்கும் விரோதமாக எழும் பாமல் சுவிசேஷத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிற புறஜாதி யாருடைய மனதை எழுப்பி விட்டுப் பகை உண்டாக்குகின்றான். இன்னும் தெளிவாகப் புரிய வேண்டுமென்றால் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்களுக்கும், சுவிசேஷத்தைக் கேட்கிறவர்களுக்கு மிடையே பகையை உண்டாக்குகின்றான்!. இப்படிப்பட்ட பகை இன்றும் உள்ளது. அது சபைக்குள்ளும் இருக்கிறது. சாத்தான் தனக்கு வேண்டியவர்களை சபைக்கு வெளியேவும் வைத்திருக் கின்றான். சபைக்குள்ளேயும் வைத்திருக்கின்றான். சிலர் சாத்தா

னின் தூதராயிருக்கிறபடியால் எப்பொழுதும் ஊழியக்காரர் மேலும் விசுவாசிகள் மேலும் குற்றஞ் சுமத்துகிறவர்களாக இருக்கின்றார்கள். (வெளி 12:10).

மோசே இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து கானான் தேசத்திற்கு வழி நடத்திக் கொண்டு வருகையில் சாத்தான் தனக்கென்று ஒரு கூட்டத்தை உண்டாக்கினான் அதில் முக்கியமானவர்களான கோராகு, தாத்தான், அபிராம் மற்றும் ஓணான் ஆகியோர் இஸ்ரவேல் புத்திரரில் சபைக்கு தலைவர்களும் சங்கத்திற்கு அழைக்கப்பட்டவர்களும் பிரபலமானவர்களாகிய இருநூற்று ஐம்பது பேர்களைச் சேர்த்துக் கொண்டு மோசேக்கு விரோதமாகப் பகையை உண்டாக்கினார்கள் (எண் 16:1-4) தேவன் மோசேயின் பக்கம் இருந்தபடியால் மோசேக்கு விரோதமாகக் குற்றஞ்சுமத்தின காரியங்கள் எல்லாம் தோல்வியில் முடிந்தது. முடிவாக தேவன் அந்தக் கூட்டத்தாரை முழுவதுமாக உயிரோடு பூமிக்குள் புதையுண்டு போகும்படி செய்து அழித்தார் (எண் 16:30-33) இந்த சம்பவம் நமக்கு பாடமாகவும், எச்சரிப்பு உண்டாக்கும்படியாகவும் எழுதப்பட்டுள்ளது (1 கொரி 10:11) எனவே சகோதரர்மேல் குற்றஞ் சுமத்துகிற யாராக இருந்தாலும் அப்படிப்பட்டவர்கள் சாத்தானின் தூதர்களாக இருக்கிறார்கள்! அவர்களை சாத்தானின் கையில் ஒப்புக் கொடுத்துவிடுவோமாக! (1கொரி 5:5).

### 3. உபத்திரவம் என்ற தடை!

அப்போஸ்தலனாகிய பவுலின் முதல் சுவிசேஷப் பயணத்தின் போது ஏற்பட்ட மூன்றாவது தடை, உபத்திரவம் என்கின்ற தடை! பவுலும், பர்னபாவும் இக்கோனியா பட்டணத்தில் அநேக நாள் சஞ்சரித்துக் கர்த்தரை முன்னிட்டு தைரியமுள்ளவர்களாய் போதகம் பண்ணினார்கள். விசுவாசத்திற்கு எதிர்த்து நிற்கும் தடையையும், சகோதரருக்கு விரோதமாகப் பகை உண்டாக்கும் தடையையும் முறியடித்துத் தொடர்ந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். தேவன் தமது கிருபையுள்ள வசனத்திற்கு அனுக்கிரகம் பண்ணினார். சாத்தான் அடுத்த தடையை உண்டாக்க ஆரம்பித்தான்!. அதுதான் உபத்திரவம் என்ற தடை! பவுலினால் செய்யப்பட்ட அற்புதங்களும், அடையாளங்களும் பார்த்த பட்டணத்து ஜனங்கள் பிரிந்து சிலர் யூதரையும், சிலர் அப்போஸ்தலரையும் சேர்ந்து கொண்டார்கள். யூதர்கள் பக்கம் சேர்ந்து கொண்டவர்கள் பவுலையும், பர்னபாவையும் அவமானப்படுத்தவும், கல்லெறியவும் வேண்டுமென்று அமளிப் பண்ணினார்கள். உடனே பவுலும், பர்னபாவும் இதை அறிந்து லீஸ்திராவுக்கும் அதைச் சுற்றியுள்ள பட்டணங்களுக்கும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள் (அப். 14:3-7) இங்கே பவுலும், பனர்பாவும் உபத்திரவத்தைக் கண்டு பயந்து ஓடவில்லை மாறாக யூதருடைய தீமையான யோசனைக்கும், தீமையோடு எதிர்த்து நிற்காமல் அவைகளுக்கு விலகிச் சென்றனர் (மத். 5:39).

லீஸ்திராவில் சுவிசேஷத்தை அறிவிக்கும் போது ஒருவன் தன் தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதல் சப்பாணியாயிருந்து ஒருபோதும் நடவாமல் கால்கள் வழங்காதவனாய் உட்கார்ந்து


பவுல் பேசுகிறதைக் கேட்டுக்கொண்டிருந்தான் பவுல் அவனை உற்றுப்பார்த்து இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் அவனுக்கு உண்டென்று கண்டு நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்து நில் என்று உரத்த சத்தத்தோடே சொன்னார் உடனே அவன் குதித்தெழுந்து நடந்தான் (அப். 14:8-10) கொஞ்சம் கொஞ்சமாக தத்தித்தத்தி நடக்கவில்லை என்பதை கவனிக்கவும். இன்று அற்புதங்களைச் செய்கிறவர்கள் பிறவி சப்பாணியை நடக்கும்படி செய்ததாகத் தெரியவில்லை. அப்போஸ்தலர்களாலே செய்யப்பட்ட அற்புதங்கள் அடையாளங்கள் எல்லாம் வசனத்தை உறுதிப்படுத்தவே செய்யப்பட்டன (மாற்கு 16:15-20) இன்று அப்போஸ்தலர்களாலே உறுதி செய்யப்பட்ட வசனங்கள் அடங்கிய புதிய ஏற்பாடு நமது கரங்களில் இருக்கிறபடியால் இன்று அற்புதங்கள் தேவையற்ற தாகக் காணப்படுகிறது. நாம் இவைகளை விசுவாசித்து நித்திய ஜீவனை பெறும்படி புதிய ஏற்பாடு நம்மை வழி நடத்துகிறது (யோவான் 20:30,31).


அப்போஸ்தலனாகிய பவுல் லீஸ்திராவில் பிறவி சப்பாணியை குணமாக்கியதைக் கண்ட ஜனங்கள் பவுலையும், பர்னபாவையும் தேவர்கள் மனுஷரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கி வந்திருக்கிறார்கள் என்று சொல்லி பர்னபாவை யூப்பித்தர் என்றும் பவுலை மெர்கூரி என்றும் சொன்னார்கள். அதாவது லீஸ்திராவின் காவல் தெய்வங்கள் மனுஷ ரூபமெடுத்து வந்திருக்கிறார்கள் என்றார்கள். மேலும் அவர்களுக்கு பூமாலைகளும் பலியிடுவதற்கு எருதுகளும் கொண்டு வந்தார்கள். பவுலும், பர்னபாவும் அவர்களுடைய செயல்களைத் தடுத்து மனுஷரே ஏன் இப்படிச் செய்கிறீர்கள் நாங்களும் உங்களைப் போல பாடுள்ள மனுஷர்தானே நீங்கள் இந்த வீணான தேவர்களை விட்டு வானத்தையும், பூமியையும் அவைகளுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்கு மனந்திரும்புங்கள் என்று பிரசங்கித்தார்கள். அப்பொழுது அந்தியோகியாவிலும், இக்கோனியாவிலும் பவுலுக்கும், பர்னபாவுக்கும் இடையூறு செய்த யூதர்கள் வந்து லீஸ்திராவிலும் பிரச்சனையை கிளப்பி விட்டு ஜனங்களுக்குப் போதனை செய்த பவுலைக் கல்லெறிந்து அவன் மரித்துப் போனான் என்று எண்ணி அவனை பட்டணத்துக்கு வெளியே இழுத்துக் கொண்டு போனார்கள். கற்களால் வீசப்பட்ட பவுலின் உடல் இரத்த வெள்ளத்தில் கிடந்தது. அவரது தசையைக் கிழித்து எலும்புகளை நொருக்கியிருந்தது! யூதர்கள் ஸ்தேவானைக் கல்லெறிந்து கொன்றது போல பவுலையும் கல்லெறிந்தார்கள்! இரத்த சாட்சியாக பவுலின் உடல் கிடந்தது! இங்கே பவுல் உண்மையிலேயே மரித்துப்போனாரா இல்லையா என்பதை நாம் அறியவில்லை ஆனால் பவுலைச் சுற்றிலும் பக்தியுள்ள சீஷர்கள் சூழ்ந்து நிற்கையில் அவர் எழுந்து பட்டணத்துக்குள்ளே பிரவேசித்து சுவிசேஷத்தை அறிவிக்கச் சென்றார் என்று கூறப்பட்டுள்ளது (அப். 14:11-20) பவுல் உபத்திரவம் என்ற தடையை முறியடித்து தொடர்ந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்.

**Bro. பாஸ்கர்** **(தொடரும்)**

# BIBLE MEDITATION

**TV PROGRAM**



**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Regd. News Paper RNI No. 47661/87
Postal Regn. No. Erode/26/2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month

திருமறை ஆசான்

இதழ் ஆசிரியரின்

# திருமறை தியானம்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

**தமிழன் TV சனி காலை 7.15 மணி**

**தமிழன் TV திங்கள் காலை 7.00 மணி**

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

## Advanced Bible Correspondence Course

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு ரூ. 50/ மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

**எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.**

இயக்குநர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ.எண் 27, காங்கேயம் 638 701.

தமிழ்நாடு. இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.